# எஸ்தர்



## ஜீன் டௌகன்

*நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்கு சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே. யாருக்குத் தெரியும் என்பதே எஸ்தர் சரித்திரத்தின் சவால்.*

*ஆம், தம் மக்களை விடுவிக்க கடவுள் பலவிதங்களில் கிரியை செய்கிறார். கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்கு பயப்படுவேன். கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன் என்பதே அவர் மக்களின் ஜெயதொனி. இக்கூற்று உண்மையே என்பதை எஸ்தர் சரித்திரம் விளக்குகிறது.*

பொருளடக்கம்


1. இராஜாவின் விருந்து

2. புதிய பட்டத்து அரசி

3. ஆமானின் சதித்திட்டம்

4. தேவனிடம் ஜெபித்த யூதர்கள்

5. எஸ்தரின் மன்றாட்டு

6. மொர்தெகாய் பெற்ற மாட்சிமை

7. எஸ்தரின் வேண்டுகோள்

8. இராஜாவின் புதிய கட்டளை

9. யூதர்களின் வெற்றி

10. மொர்தெகாயின் உயர்நிலை

## அதிகாரம் 1

# இராஜாவின் விருந்து

வசனம்: 1:1-4

இந்துதேசம்முதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேருவின் நாட்களில் சம்பவித்ததாவது: ராஜாவாகிய அகாஸ்வேரு சூசான் அரமனையிலிருக்கிற தன் ராஜ்யத்தின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தான். அவன் தன் ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்திலே தன்னுடைய பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் விருந்துபண்ணினான். அப்பொழுது பெர்சியா மேதியா தேசங்களிலுள்ள மகத்தானவர்களும், நாடுகளின் அதிபதிகளும், பிரபுக்களும், அவன் சமுகத்தில் வந்திருந்தார்கள். அவன் தன் ராஜ்யத்தின் மகிமையான ஐசுவரியத்தையும், தன் மகத்துவத்தின் சிறந்த பிரதாபத்தையும் அநேக நாளாகிய நூற்றெண்பதுநாளளவும் விளங்கச்செய்துகொண்டிருந்தான்.

சத்திய வேதத்திலுள்ள எஸ்தரின் அழகான சரித்திரத்தை எழுதியவர் யார் என்பது தெரியவில்லை. பரிசுத்தவேதாகமத்திலுள்ள மற்ற ஆகமங்களுக்கும் எஸ்தரின் ஆகமத்துக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது. அதாவது தேவன் அல்லது கர்த்தர் என்ற வார்த்தை இந்தப் புத்தகத்தில் எங்கும் கூறப்படவில்லை. அப்படியானால் இப்புத்தகம் ஏன் வேதாகமத்தில் இடம்பெற்றுள்ளது? இஸ்ரவேல் நாட்டின் வரலாற்றில், ஒரு முக்கியமான காலகட்டத்தில் - ஒரு பகையரசன் இஸ்ரவேலர் என்ற யூதரை முற்றும் அழித்து ஒழிக்கமுற்பட்ட காலத்தில் - எஸ்தரின் சரித்திரம் அடங்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஆனால் தேவன் தெரிந்துகொண்ட ஒரு மனிதனின்மூலமும் அவனது இனத்தாளாகிய அழகிய எஸ்தர்மூலமும் கிரியைசெய்து, தமது ஜனத்தை இரட்சித்தார். அவ்வரலாறே பின்வரும் எஸ்தரின் வியத்தகு சரித்திரமாகும்.

பாபிலோன் மன்னர் நேபுகாத்நேச்சாரினால் யூதர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அவர்களில் மிகச்சிறந்த பலர் சிறைப்படுத்திக் கொண்டுபோகப்பட்டனர். தேவன் இதை அனுமதித்தார் (2.இரா.24:14). நேபுகாத்நேச்சார் இறந்துபோனபின் அவனது பேரனான பெல்ஷாத்சார் தோற்கடிக்கப்பட்டான் (தானி.5:30,31). மேதியர்களுக்கும் பெர்சியர்களுக்கும் இராஜாவாக இருந்த அகாஸ்வேரு என்பவன் இந்துதேசம் முதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள நூற்றிருபத்திஏழு நாடுகளை ஆண்டுவந்த காலத்தில் எஸ்தரின் வரலாறு ஆரம்பமாகிறது. அகாஸ்வேரு இராஜாவின்நாடு கல்தேயரும் மேதியரும், பெர்சியரும், யூதரும் மற்றும் அவனால் ஜெயிக்கப்பட்ட வேற்று இனத்தவர் பலரும் அடங்கிய நாடாக இருந்தது.

அகஸ்வேரு இராஜா தனது மிகப்பரந்த நாட்டைப்பற்றியும் மகிமையான ஐஸ்வரியத்தைப் பற்றியும் அதிக பெருமை கொண்டு அவனுடைய இராச்சியத்திலிருந்த பல நாடுகளைச் சேர்ந்த மகத்தானவர்களுக்கும்,

அதிபதிகளுக்கும் இளவரசர்களுக்கும் இவற்றை விளங்கச்செய்யவிரும்பினான். அதுமட்டுமின்றி, அவன் மற்றுமொரு போருக்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்ததை அவனுடைய இராஜ்யத்தைச் சேர்ந்த அதிபதிகளுக்கும் இளவரசர்களுக்கும் அறிவிக்க விரும்பினான். அவன் தன் இராஜ்யத்தின் மகிமையான ஐஸ்வரியத்தையும் தன் மகத்துவத்தின் சிறந்த பிரஸ்தாபத்தையும் காண்பிக்கும்பொருட்டு, அவர்களனைவரையும் தான் செய்வித்த அரண்மனை விருந்துக்கு அழைப்பித்திருந்தான். அகாஸ்வேரு இராஜா ஒரு பெரும் பெருமைக்காரன். அவன் தற்பெருமையில் .... இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் .......நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா....? என்று கூறிய நேபுகாத்நேச்சார் இராஜாவைப் போன்றவன் (தானி.4:30).

அகாஸ்வேரு தன் மகிமைப் பிரஸ்தாபத்தை நூற்றெண்பது நாளளவும்-ஆறுமாதகாலமாக விளங்கச்செய்துகொண்டிருந்தான். பல நாடுகளிலிருந்து வரவேண்டிய தூரம் மிக அதிகமாக இருந்தாலும் பயணம் அக்காலத்தில் மிகக் கடினமாக இருந்தபோதிலும், பலரும் கூட்டங் கூட்டமாக வந்தும் சென்றதுமாக இருந்தனர் - நிரந்தரமாக விழாவில் தங்கியிருந்தவர் மிகச்சிலரே.

வசனம் 1:5

அந்த நாட்கள் முடிந்தபோது, ராஜா சூசான் அரமனையில் வந்திருந்த பெரியோர்முதல் சிறயோர்மட்டுமுள்ள சமஸ்த ஜனங்களுக்கும் ராஜ அரமனையைச்சேர்ந்த சிங்காரத்தோட்டத்திலுள்ள மண்டபத்தில் ஏழுநாள் விருந்துசெய்வித்தான்.

ஆறுமாதங்களாக ஓய்வின்றி நடந்த விழாவின் முடிவில் இராஜா, அயராது செய்த விருந்தோம்பல்களுக்கு அணி செய்யுமாறு, ஓர் ஏழுநாள் சிறப்பு விருந்துக்கு ஏற்பாடு செய்தான். அதற்கு அரண்மனையில் இருந்த பெரியோர் முதல் சிறியோர் வரையிலானவர்களை அழைப்பித்தான். இத்தகையோர் உபசரணைகளுக்குப் பெரும்பணம் செலவாகியிருக்கக் கூடுமன்றோ!

வசனம் 1:6-7

அங்கே வெண்கலத் தூண்களின்மேலுள்ள வெள்ளி வளையங்களில் மெல்லிய நூலும் சிவப்புநூலுமான கயிறுகளால் வெள்ளையும் பச்சையும் இளநீலமுமாகிய தொங்குதிரைகள் விதானித்திருந்தது. சிவப்பும் நீலமும் வெள்ளையும் கறுப்புமான கற்கள் பதித்திருந்த தளவரிசையின்மேல் பொற்சரிகையும் வெள்ளிச்சரிகையுமான மெத்தைகள் வைக்கப்பட்டிருந்தது. பொன்னால் செய்யப்பட்ட நானாவித பாத்திரங்களில் பானம் கொடுக்கப்பட்டது. முதல்தரமான திராட்சரசம் ராஜஸ்திதிக்கு ஏற்கப் பரிபூரணமாய்ப் பரிமாறப்பட்டது.

இந்த வசனங்களில் இராஜாவின் அரண்மனையும் அரண்மனையைச் சேர்ந்த சிங்காரத்தோட்டத்திலுள்ள மண்டபமும் வருணிக்கப்பட்டுள்ள விதங்களிலிருந்து இராஜாவின் செல்வநிலையைப் புரிந்துகொள்ள முடிகிறது. இராஜா ஏற்பாடு

செய்திருந்த விருந்து, இராஜாவின் அரண்மனையைச் சேர்ந்த சிங்காரத்தோட்டத்திலிருந்த ஓர் அழகிய மண்டபத்தில்தான் நடந்தது.

அந்த மண்டபம் மிகவும் ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கே வெண்கலத்தூண்களின்மேலுள்ள வெள்ளிவளையங்களில் மெல்லிய நூலும் சிவப்புநூலுமான கயிறுகளால் வெள்ளையும் பச்சையும் இள நீலமுமாகிய தொங்குதிரைகள் விதானித்திருந்தன. விருந்தினர் அமர்வதற்காக வெள்ளையும் கறுப்புமான சலவைக்கற்களால் அமைக்கப்பட்டிருந்த தளவரிசைகளின்மேல் பொற்சரிகையும், வெள்ளிச்சரிகையுமான மெத்தைகள் விரிக்கப்பட்டிருந்தன. இராஜஸ்திரிக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருந்த விருந்து வரிசையிலே பொன்னினாற் செய்யப்பட்ட நானாவித பாத்திரங்களிலே முதற் தரமான திராட்சரசம் பரிமாறப்பட்டது. அந்தப் பாத்திரங்கள் மற்றவைகளினின்று வேறுபட்டு அழகிய வேலைப்பாடுகளுடன் கூடினவைகளாக இருந்தன. அவைகளிலே பரிபூரணமான அளவுக்கு திராட்சரசம் பரிமாறப்பட்டது.

வசனம் 1:8

அவரவருடைய மனதின்படியே செய்யலாம் என்று ராஜா தன் அரமனையின் பெரிய மனுஷருக்கெல்லாம் கட்டளையிட்டிருந்தபடியினால், முறைப்படி பானம்பண்ணினார்கள். ஒருவனும் பலவந்தம் பண்ணவில்லை.

அரண்மனையின் விருந்துமுறைச் சட்டங்களுக்கேற்ப யாரொருவனும் தான் விரும்பியபடி குடிக்கலாம் அல்லது குடிக்காமல் இருக்கலாம். இராஜா எல்லா வேலைக்காரரிடத்திலும் இந்த விருந்துமுறைச்சட்டத்தை நினைவுபடுத்தி ஒருவனும் பலவந்தம்பண்ணாமல் அவரவர் மனதின்படியே பானம்பண்ண அனுமதிக்கப்பட்டனர். இராஜாவும் விருந்தில் பங்குகொண்டு திராட்சரசம் குடித்துக்கொண்டிருந்தான். விருந்தினரும் அவனுடன் குடித்துக் கொண்டாடினர்.

வசனம் 1:9

ராஜஸ்திரீயாகிய வஸ்தியும் ராஜாவாகிய அகாஸ்வேருவின் அரமனையிலே ஸ்திரீகளுக்கு ஒரு விருந்துசெய்தாள்.

இராஜாவின் அரண்மனையிலே விருந்தில் கலந்துகொண்டிருந்த அனைவரும் ஆண்களே என்று தோன்றுகிறது. ஏனென்றால் பெண்களுக்கு, இராஜாவின் அரண்மனையிலே, வேறு ஒரு பகுதியில், அதே நேரத்தில் இராஜஸ்திரியாகிய வஸ்தி வேறு ஒரு விருந்து கொடுத்துக்கொண்டிருந்தாள். வஸ்தி என்ற வார்த்தைக்கு அன்புள்ளவள் என்பது பொருள். அப்பெயர், இராஜாவுக்கு அவள் மிகவும் பிரியமான மனைவியாக இருந்தாள் என்பதனை விளக்குகிறது.

வசனம் 1:10

ஏழாம் நாளிலே ராஜா திராட்சரசத்தினால் களிப்பாயிருக்கும்போது, மகா ரூபவதியாயிருந்த ராஜஸ்திரீயாகிய வஸ்தியின் சௌந்தரியத்தை ஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி, ராஜகிரீடம் தரிக்கப்பட்டவர்களாக அழைத்துவரவேண்டுமென்று,

அன்று அந்த விருந்தின் கடைசித்தினம். இராஜா திராட்சை மதுவை அளவுக்கு அதிகமாகக் குடித்திருந்தான். மிகவும் மகிழ்ந்து போய் இருந்தான். அப்போது அவன் செய்த ஒரு காரியம், ஒருவேளை குடியாமல் இருந்திருந்தால் செய்திருக்கமாட்டான். அந்த நாட்கள் முடியுமுன்பு, கடைசியாக ஒரு நல்ல காட்சி,- கண்ணுக்கு விருந்து,- ஏற்படுத்த விரும்பினான் போலும்! தனது செல்வத்தையும் அரண்மனை அழகுகளையும் அதிகாரத்தின் ஐஸ்வரியங்களையும் காண்பித்த அவன் அவைகளுக்குச் சிகரமாக எதைச் செய்யமுடியும் என எண்ணினான். அவனுக்கு ஒரு எண்ணம் உதித்தது. தனது அழகிய இராணியை,- மனைவியாகிய வஸ்தியை,- முன்கொண்டு வந்து நிறுத்திக்காட்ட விரும்பினான். அப்போது இராஜாவுக்கு அனைத்துச் செல்வமும் இருந்ததை அவனது அதிபதிகள் கண்டு மகிழ்வர் என்று அவன் எண்ணினான் போலும்!

உடனே அவன் ஏழு பிரதானிகளை அழைத்து, இராஜ ஸ்திரியாகிய வஸ்தியை, இராஜஅலங்காரங்களுடன், இராஜகிரீடம் தரிக்கப்பட்டவளாக இராஜாவுக்கு முன்பாக அழைத்துவரவேண்டுமென்று, அவர்களுக்குக் கட்டளையிட்டான். உடனே இராஜாவின் கட்டளைப்படி, இராஜ ஸ்திரியான வஸ்தியை அழைத்துவர அந்த ஏழு பிரதானிகளும் புறப்பட்டுச் சென்றனர்.

வசனம் 1:11-12

ராஜாவாகிய அகாஸ்வேருவின் சமுகத்தில் சேவிக்கிற மெகுமான், பிஸ்தா, அற்போனா, பிக்தா, அபக்தா, சேதார், கர்காஸ் என்னும் ஏழு பிரதானிகளுக்கும் கட்டளையிட்டான். ஆனாலும் பிரதானிகள் மூலமாய் ராஜா சொல்லியனுப்பின கட்டளைக்கு ராஜஸ்திரீயாகிய வஸ்தி வரமாட்டேன் என்றாள். அப்பொழுது ராஜா கடுங்கோபமடைந்து, தனக்குள்ளே மூர்க்கவெறிகொண்டான்.

இராஜஸ்திரியான வஸ்தியின் எண்ணமோ வேறுபட்டிருந்தது. அவள் அவர்களுடன் செல்ல மறுத்துவிட்டாள். ஆனால் அது இராஜாவினிடத்தில் பிறந்த அரச கட்டளையாயிற்றே! மிகவும் மோசமான ஒரு கட்டளை. அவள் அந்த ஏழு பிரதானிகளையும் இராஜாவாகிய அகாஸ்வேருவினிடத்துக்குத் திரும்ப அனுப்பிவிட்டாள். அவள் அவர்களுடன் செல்லவில்லை.

அவள் ஏன் போகவில்லை? வஸ்தியின் நிலையை எண்ணிப் பார்ப்போமாக. பெண்களுக்காக, அரண்மனையில் மற்றொரு பகுதியில், அவள் ஒரு

விருந்துவிழாவைத் தலைமை நடத்திக்கொண்டிருந்தாள். அந்த நிலையில் திடீரென்று அரசகட்டளை பிறக்கிறது. அவளுக்கு அழைப்பு வருகிறது. இராஜ கிரீடம் தரிக்கப்பட்டவளாக, ஆண்களின் விருந்து மண்டபத்துக்கு வந்து, அவளுடைய அழகை, அந்த இராஜாவின் விருந்தினர்களுக்குக் காண்பிக்க வேண்டுமாம். ஆனால் இராஜா நடத்திக்கொண்டிருந்த அந்த விருந்துவிழா ஆண்களுக்குமட்டுமே. அந்த நாளில் அவர்களுடைய மரியாதைப் பழக்கத்தின்படி ஒரு ஸ்திரி முக்காடிட்டுக் கொள்ளாமல் ஆண்களின் மத்தியில் வந்து நிற்பது கிடையாது. மேலும் அந்த விருந்து விழாவில் ஆண்கள் ஏழு நாட்களாக குடித்து வெறித்துக்கொண்டிருந்தனர். ஒரு ஸ்திரி எவ்வாறு அங்கே செல்லமுடியும்? அவள் போகமறுத்துவிட்டாள்.

திருப்பி அனுப்பப்பட்ட ஏழுபேரும் இராஜசமுகத்தில் திரும்பி வந்தனர், கசப்பான அந்தச் செய்தியுடன். மேன்மைதங்கிய இராஜாவே! இராஜ ஸ்திரியான வஸ்தி வரமறுத்துவிட்டார்கள். .... என்ன? என்னுடைய கட்டளையைப் புறக்கணிக்க அவளுக்கு என்ன துணிச்சல்! இராஜா அகாஸ்வேரு கடுங்கோபத்துடன் மூர்க்கவெறி கொண்டான். ஏன்? இந்த இராஜா- அகாஸ்வேரு இராஜா- மேதியர், பெர்சியர் முதலான 127 நாடுகளுக்கு இராஜா. செல்வமும் அதிகாரமும் நிறைந்த அவன், விருந்து மண்டபத்திலே எல்லா விருந்தினரான பிரதானிகளின் முன்னிலையிலே இழிவுபடுத்தப்பட்டுவிட்டான். அப்பொழுது இராஜா கடும் கோபமடைந்து தனக்குள்ளே மூர்க்கவெறி கொண்டான் என்று வேதம் கூறுகிறது. வஸ்தியின் வரமுடியாமை ஒரு நல்ல காரணத்தின் அடிப்படையிலானதே என அவன் சிந்திக்கவில்லை. அவனுடைய கௌரவம் பாதிக்கப்பட்டுவிட்டதே என்பது அவனால் பொறுத்துக்கொள்ளமுடியாததாயிருந்தது.

வசனம் 1:13-15

அச்சயமத்தில் ராஜசமுகத்தைத் தரிசிக்கிறவர்களும், ராஜ்யத்தின் முதல்ஆசனங்களில் உட்காருகிறவர்களுமான கர்ஷேனா, அத்மாதா, தர்ஷீஸ், மேரேஸ் மர்சேனா, மெமுகான் என்னும் பெர்சியர் மேதியருடைய ஏழு பிரபுக்களும் அவன் சமீபத்தில் இருந்தார்கள். ராஜா நியாயப்பிரமாணத்தையும் ராஜநீதியையும் அறிந்தவர்களிடத்தில் பேசுவது தனக்கு வழக்கமானபடியால், காலாகால வர்த்தமானங்களை அறிந்த பண்டிதர்களை நோக்கி: ராஜாவாகிய அகாஸ்வேரு பிரதானிகள் மூலமாய்ச் சொல்லியனுப்பின கட்டளையின்படி ராஜஸ்திரீயாகிய வஸ்தி செய்யாமற்போனதினிமித்தம், தேசச்சட்டத்தின்படி அவளுக்குச் செய்யவேண்டியது என்ன என்று கேட்டான்.

வஸ்தி தண்டிக்கப்படவேண்டுமென்றே அவன் எண்ணினான். அவனது கோபத்தில் அவன் தனித்துச் செயற்படவில்லை. அவனுடைய ஆலோசனைக்காக, அவனுடைய சமுகத்தில் உட்காருகிற ஏழு பிரபுக்களை அவன் அழைத்துப் பேசுகிறான். இந்த விஷயத்தில், தான் கோபமடைந்தபோது, இதற்குமுன் கோபமடைந்து மூர்க்கத்தனமாக நடந்துகொண்ட நேபுகாத்நேச்சார் இராஜாவைப்போல் ( தானி.3:19,20 ) அவன் நடந்துகொள்ளவில்லை. அவன் ஏழு பிரதானிகளை அழைப்பித்தான். அந்த ஏழுபேரும்,

நியாயப்பிரமாணத்தையும் இராஜநீதியையும், காலாகாலா வர்த்தமானங்களையும் அறிந்த பண்டிதர்களாயிருந்தார்கள். அவன் அவர்களை நோக்கி, இராஜாவின் கட்டளையின்படி இராஜஸ்திரியாகிய வஸ்தி செய்யாமற்போனதினிமித்தம் தேசச் சட்டப்படி அவளுக்குச் செய்யப்படவேண்டியது என்ன? என்று கேட்டான். அவன் சட்டத்தின்படி செய்ய விரும்பினான். ஆனால் வராமையின் காரணத்தை விளக்கும்படி வஸ்தியிடம் கேட்கவில்லை. இது குறித்து யாரும், இராஜாவாகிய அகாஸ்வேரு செய்வது சரியல்ல என்று கூறத் துணிவார்களோ? ஒருபோதுமில்லை.

வசனம் 1:16-18

அப்பொழுது மெமுகான் ராஜாவுக்கும் பிரபுக்களுக்கும் முன்னே பிரதியுத்தரமாக: ராஜஸ்திரீயாகிய வஸ்தி ராஜாவுக்கு மாத்திரமல்ல, ராஜாவாகிய அகாஸ்வேருவினுடைய சகல நாடுகளிலுமுள்ள சகல பிரபுக்களுக்கும் சகல ஜனங்களுக்குங்கூட அநியாயஞ்செய்தாள். ராஜாவாகிய அகாஸ்வேரு ராஜஸ்திரீயாகிய வஸ்தியைத் தமக்கு முன்பாக அழைத்துவரச் சொன்னபோது, அவள் வரமாட்டோம் என்கிற செய்தி எல்லா ஸ்திரீகளுக்கும் பிரசித்தமானால், அவர்களும் தங்கள் புருஷரைத் தங்கள் பார்வையில் அற்பமாய் எண்ணுவார்கள். இன்றையதினமே பெர்சியாவிலும் மேதியாவிலுமுள்ள பிரபுக்களின் ஸ்திரீகள் ராஜஸ்திரீயின் செய்தியைக் கேட்கும்போது, ராஜாவின் பிரபுக்களுக்கெல்லாம் அப்படியே சொல்லுவார்கள். மிகுந்த அசட்டையும் எரிச்சலும் விளையும்.

அப்போது, அந்த ஏழு பிரதானிகளில் ஒருவனாகிய மெமுகான் எனப்பட்டவன் இராஜாவுக்கு மாறுத்தரமாக, இராஜஸ்திரியாகிய வஸ்தி, இராஜாவுக்கு மாத்திரமல்ல, இராஜாவாகிய அகாஸ்வேருவினுடைய சகல நாடுகளிலுமுள்ள சகல பிரபுக்களுக்கும் சகல ஜனங்களுக்கும் கூட அநியாயம் செய்தாள் என்றான். அவன் அவ்வாறு நினைக்கக் காரணம் என்ன? அடுத்த சில வாக்கியங்களிலிருந்து அதன் காரணம் நமக்குப் புரிகிறது. இராஜாவாகிய அகாஸ்வேரு இராஜஸ்திரியாகிய வஸ்தியை தமக்கு முன்பாக அழைத்துவரச் சொன்னபோது அவள் வரமாட்டேன் என்கின்ற செய்தி எல்லா ஸ்திரிகளுக்கும் பிரசித்தமானால் அவர்களும் தங்கள் புருஷரைத் தங்கள் பார்வையில் அற்பமாய் எண்ணுவார்கள்..... அதனால் மிகுந்த அசட்டையும் எரிச்சலும் விளையும்..... என்று அவன் மேலும் கூறினான். அதுதான் காரணம். வஸ்தி செய்தது சரிதானே என்று எண்ணுவார் யாருமேயில்லை. அல்லது ஏன் வரவில்லை என்ற காரணத்தைக் கூற அவளுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கவும் யாரும் எண்ணிப்பார்க்கவில்லை. அது நாடெங்கிலும் உள்ளவர்களுக்கு, ஆண்களுக்குத் தொல்லையுண்டாக்கும், எரிச்சலும் அசட்டையும் விளையும்- என்று அவர்கள் எண்ணினார்கள். விசாரணை முடிந்து விட்டது.

வசனம் 1:19

ராஜாவுக்குச் சம்மதியாயிருந்தால், வஸ்தி இனி ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு முன்பாக வரக்கூடாது என்றும், அவளுடைய ராஜமேன்மையை அவளைப் பார்க்கிலும் உத்தமியாகிய மற்றொரு ஸ்திரீக்கு ராஜா கொடுப்பாராக என்றும், அவரால் ஒரு ராஜகட்டளை பிறந்தது, அது மீறப்படாதபடிக்கு, பெர்சியாவுக்கும் மேதியாவுக்கும் உரிய தேசச் சட்டத்திலும் எழுதப்படவேண்டும்.

மெமுகான், வஸ்திக்கு வழங்கப்படவேண்டிய தண்டனை என்னவாயிருக்கலாம் என்பதனையும் கூறுகிறான். இராஜமேன்மையிலிருந்து அவள் நீக்கப்படவேண்டுமென்று இராஜகட்டளை பிறப்பிக்கலாமென்று அவன் கூறுகிறான். இராஜஸ்திரி பதவியிலிருந்தும் அவள் நீக்கப்படுதல் வேண்டும். அவள் இராஜாவின் மனைவி என்ற ஸ்தானத்திலிருந்தும் நீக்கப்பட்டு இராஜா வேறொரு ஸ்திரியை தெரிந்தெடுக்கலாம் என்றும் மெமுகான் கூறுகிறான். இது மிகவும் கடுமையான தண்டனை. வஸ்தி இராஜ சட்டத்தை மீறிவிட்டாள் என்று யாரும் கூறவில்லை. அவர்களின் மனதினிலே சுயநலமான சில எண்ணங்கள் இருந்தன.

மெமுகான் அந்தச் சுயநலத்தை வெளியிட்டுக் கூறுகிறான். இப்படி இராஜா தீர்த்தகாரியம் ... கேட்கப்படும்போது ... எல்லா ஸ்திரிகளும் தங்கள் புருஷரைக் கனம்பண்ணுவார்கள் என்று அவன் கூறுகிறான். ஆனால் ஒரு சட்டம் வெளியிடப்படுவதால் மட்டும், மனைவிமார்கள் உடனே தங்கள் கணவரைக் கனம்பண்ண ஆரம்பித்துவிடுவார்கள் என நினைப்பது சரியில்லை. எப்படியோ அது இராஜாவுக்கும் பிரதானிகளுக்கும் ஏற்றதாக இருந்ததுபோலும். இந்த வார்த்தை இராஜாவுக்கும் பிரதானிகளுக்கும் நலமாய்த் தோன்றினது என வேதம் கூறுகிறது. இராஜா அந்தக் கட்டளையை, அவ்வாறே எழுதி முத்திரையிட்டான். அது பின் அந்த நாட்டில் வழங்குகின்ற எல்லா அட்சரங்களிலும், பாஷைகளிலும் மொழிபெயர்த்து எழுதியனுப்பப்பட்டு அவனுடைய 127 நாடுகளுக்கும் பிரசித்தம்பண்ணப்பட்டது. வஸ்தியை யாரும் விசாரித்துக் கேட்கவில்லை. அவள் பேச அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. கட்டளை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அது மீறப்படாதபடி சட்டத்தில் எழுதப்பட்டது (தானி.6:12,15). அதுதான் மேதியாவுக்கும்,பெர்சியாவுக்கும் உரிய தேசச்சட்டம். ஆனால் வஸ்தி ராஜப்பண்பு என்ற உயர்ந்த நிலையில் அமைதிகொண்டாள். அவள் தன் கணவனையும் அரசின் உயர்ந்த அந்தஸ்தையும் இழந்துவிட்டபோதிலும், அரசு கடத்தப்பட்டு வாழாவெட்டியாக்கிவிடப்பட்டபோதிலும் அமைதியையே அவள் மேற்கொண்டாள். அரசகட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டதனால் அவளுக்கு ஒரு பேரிழப்பு ஏற்பட்டது. ஆனால் அறிந்தும் அறியாமலும் ஒரு பெரிய நாட்டினைக் காக்கச் செயற்பட்டிருந்த தேவனுடைய திட்டமாகிய நிகழ்ச்சிகளின் சங்கிலித்தொடரில் அவள்தான் ஆரம்பநிலை. தேவன் தமது சித்தத்தைச் செயற்படுத்த, எதனையும், யாரையும், இராஜா, அல்லது இராஜ ஸ்திரி ஆகிய எவரையும் பயன்படுத்திக்கொள்ள வல்லவராயிருக்கிறார். நீதி.21:1 இல் உள்ளபடி இராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப்

போலிருக்கிறது. ஆனால் விருந்துச்சாலைக்குவர இராஜஸ்திரி மறுத்துவிடுவது, எந்தவிதத்தில் ஒரு பெரிய நாட்டைப் பாதுகாக்கும் திட்டத்தின் ஆரம்பமாக அமையக்கூடும்? மேலும் படிப்போமாக.....!

## அதிகாரம் 2

# புதிய பட்டத்து அரசி

வசனம் 2:1

இவைகளுக்குப்பின்பு, ராஜாவாகிய அகாஸ்வேருவின் உக்கிரம் தணிந்தபோது, அவன் வஸ்தியையும் அவள் செய்ததையும் அவளைக்குறித்துத் தீர்மானிக்கப்பட்டதையும் நினைத்தான்.

இராஜஸ்திரியாகிய வஸ்தி அனைத்துப் பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுவிட்டதைக் குறித்து அகாஸ்வேரு இராஜா மனம் வருந்தினானா? முதலாவது வசனத்தை நாம் வாசிக்கும்போது அவ்வாறுதான் தோன்றும். இவைகளுக்குப்பின்.... இராஜாவாகிய அகாஸ்வேருவின் உக்கிரம் தணிந்தபோது....என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அந்த இராஜா, அவனிந்த நிலையினை நன்கு உணர்ந்தான். அவன் நினைவுகூர்ந்தவை (1) வஸ்தி (2) அவன் செய்தது (3) அவளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு - இவைகளிலிருந்து அவன் மனம் வருந்தியதாக ஏதேனும் ஒரு குறிப்புக் காணக்கிடக்கிறதா? அப்படியிருப்பினும் அது காலங்கடந்ததொன்றாகும். ஏனென்றால் மேதிய பெர்சிய சட்டங்கள் மாற்றப்படக்கூடாதவையாகும்.

வசனம் 2:2-4

அப்பொழுது ராஜாவைச் சேவிக்கிற அவனுடைய ஊழியக்காரார் அவனை நோக்கி: ரூபவதியாயிருக்கிற கன்னிப்பெண்களை ராஜாவுக்காகத் தேடவேண்டும். அதற்காக ராஜா தம்முடைய ராஜ்யத்தின் நாடுகளிலெல்லாம் விசாரிப்புக்காரரை வைக்கவேண்டும். இவர்கள் ரூபவதிகளாயிருக்கிற சகல கன்னிப்பெண்களையும் கூட்டி, சூசான் அரமனையிலிருக்கிற கன்னிமாடத்துக்கு அழைத்துவந்து, ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய யேகாயின் வசத்திலே ஒப்புவிக்கவேண்டும். அவர்களுடைய சுத்திகரிப்புக்கு வேண்டியவைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

அப்பொழுது ராஜாவின் கண்களுக்குப் பிரியமான கன்னி வஸ்திக்குப் பதிலாகப் பட்டத்து ஸ்திரீயாகவேண்டும் என்றார்கள். இந்த வார்த்தை ராஜாவுக்கு நலமாய்த் தோன்றினபடியால் அப்படியே செய்தான்.

இராஜாவுடனிருந்த சிலர், அவனுக்கு நெருக்கமாயிருந்த அவர்கள், இராஜாவுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மனவருத்தத்தின் அறிகுறிகளைக்கண்டு அவனுக்குச் சில நல்லாலோசனைகளைக் கூறத் தலைப்பட்டனர்.

இராஜஸ்திரியான வஸ்திக்குப் பதிலாக தகுதியான இளவரசியை இராஜா ஏன் தெரிந்தெடுக்கக்கூடாதென்று அவர்கள் கேட்டனர். இராஜா விசாரிப்புக்காரரை ஏற்படுத்தி, தம்முடைய இராஜ்யத்தின் நாடுகளிலெல்லாம் ரூபவதிகளாயிருக்கிற கன்னிப்பெண்களை இராஜாவிற்காகத் தேடவேண்டும் என்று கட்டளை இட்டான். இதிலே அறிவுள்ளவளாகவும், பண்புள்ளவளாகவும், திறமை உள்ளவளாகவும் இருக்கவேண்டும் என்று ஒன்றும் கூறப்படவில்லை. ரூபவதிகளாக இருக்கவேண்டும் என்று மட்டுமே கூறினார்கள். ரூபவதிகளாயிருக்கிற சகல கன்னிப்பெண்களையும் கூட்டி சூசான் அரண்மனையிலிருக்கிற கன்னிமாடத்திற்கு அழைந்துவந்து பிரதானியாகிய யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்படவேண்டும் என்றும், இராஜா தன் கண்களுக்குப் பிரியமான கன்னியை வஸ்திக்குப் பதிலாக பட்டத்து ஸ்திரீயாக்கவேண்டும் என்றும் கூறினாாகள். இந்த வார்த்தைகளும், திட்டமும், இராஜாவுக்கு நலமாய்த் தோன்றினபடியால் அவ்வாறே செய்ய ஆரம்பிக்கும்படி உத்தரவிட்டான்.

வசனம் 2:5-7

அப்பொழுது சூசான் அரமனையிலே பென்ஜமீனியனாகிய கீசின் குமாரன் சீமேயினுடைய மகனாகிய யாவீரின் குமாரன் மொர்தெகாய் என்னும் பேருள்ள ஒரு யூதன் இருந்தான். அவன் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவின் ராஜாவாகிய எகொனியாவைப் பிடித்துக்கொண்டு போகிறபோது, அவனோடேகூட எருசலேமிலிருந்து பிடித்துக்கொண்டு போகப்பட்டவர்களில் ஒருவனாயிருந்தான். அவன் தன் சிறிய தகப்பன் குமாரத்தியாகிய எஸ்தர் என்னும் அத்சாளை வளர்த்தான். அவளுக்குத் தாய்தகப்பனில்லை. அந்தப் பெண் ரூபவதியும் சௌந்தரியமுடையவளுமாயிருந்தாள். அவள் தகப்பனும் அவள் தாயும் மரணமடைந்தபோது, மெர்தெகாய் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்துக்கொண்டான்.

எஸ்தரின் சரித்திரத்தில் வருகிற மிகமுக்கியமான நபராகிய மொர்தெகாய் என்ற ஒருவரை நாம் இந்த வசனங்களில் காண்கிறோம். அவன் பென்ஜமீன் கோத்திரத்தில் தோன்றிய ஒரு யூதனாக இருந்தான். மொர்தெகாயும் அவன் குடும்பத்தினரும், பாபிலோனிய இராஜாவாகிய நேபுகாத்நேச்சாரினால் பல ஆண்டுகளுக்கு முன்பு யூதாவிலிருந்து சிறைப்படுத்திக் கொண்டு போகப்பட்டவர்களாயிருந்தனர். அப்போது அவன் எந்த வயதினன், அல்லது அவனைப் பற்றிய செய்தி ஒன்றும் இங்கு கூறப்படவில்லை. ஆனால் அவன் அன்பு உள்ளங்கொண்டவனாயிருந்ததைத் தனது சிறிய தகப்பன் குமாரத்தியாகிய எஸ்தர் என்னப்பட்டவளைத் தத்து எடுத்து வளர்த்துவந்தான் என்கிற செய்தியிலிருந்து நாம் அறிகிறோம். அந்த எஸ்தர் தாயையும் தந்தையையும் இழந்தவளாயிருந்தபடியால் மொர்தெகாய் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்து வளர்த்துவந்தான். சங்.146:9ல் கர்த்தர் திக்கற்ற பிள்ளையையும் விதவைகளையும் ஆதரிக்கிறார் என்று கூறப்பட்டுள்துபோல் மொர்தெகாய் ஆதரவற்ற எஸ்தரை எடுத்து வளர்த்தான். அவளுடைய பெயர் எஸ்தர் அல்லது அத்சாள் என்றும், அவள் சௌந்தரியமுடையவளும் ரூபவதியுமாயிருந்தாள் என்று வேதம் கூறுகிறது.

வசனம் 2:8-9

ராஜாவின் கட்டளையும் தீர்மானமும் பிரசித்தமாகி, அநேகம் பெண்கள் கூட்டப்பட்டு, சூசான் அரமனையிலுள்ள யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்படுகிறபோது, எஸ்தரும் ராஜாவின் அரமனைக்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்டு, ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிற யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டாள். அந்தப் பெண் அவன் பார்வைக்கு நன்றாயிருந்ததினாலே, அவளுக்கு அவன் கண்களிலே தயைகிடைத்தது. ஆகையால் அவளுடைய சுத்திகரிப்புக்கு வேண்டியவைகளையும், அவளுக்குத் தேவையான மற்றவைகளையும் அவளுக்குக் கொடுக்கவும், ராஜ அரமனையிலிருக்கிற ஏழு தாதிமார்களை அவளுக்கு நியமிக்கவும் ஜாக்கிரதைப்பட்டுக் கன்னிமாடத்தில் சிறந்த ஒரு இடத்திலே அவளையும் அவள் தாதிமார்களையும் வைத்தான்.

இராஜாவின் ஆட்கள் தேடி, சௌந்தரியமுள்ள பெண்களைக்கூட்டி யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கிறபோது எஸ்தரும் அழைத்துவந்து ஒப்புவிக்கப்பட்டாள். அவளுக்கு அவன் கண்களிலே தயை கிடைத்தது என்று வேதம் கூறுகிறது. அந்தப் பெண் அவன் பாாவைக்கு நன்றாயிருந்தாள். ஆகையால் அவளுடைய சுத்திகரிப்பிற்கு வேண்டியவைகளையும் அவளுக்குத் தேவையான மற்றவைகளையும் அவளுக்குக் கொடுத்தான். இராஜ அரண்மனையிலிருக்கிற ஏழு தாதிமார்களை அவளுக்கு நியமித்தான். கன்னிமாடத்தில் சிறந்த ஓரிடத்தில் அவளையும் அவளுடைய தாதிமார்களையும் வைத்தான் அந்தப் பாதுகாவலன்.

வசனம் 2:10

எஸ்தரோவென்றால் தன் குலத்தையும், தன் பூர்வோத்தரத்தையும் அறிவிக்காதிருந்தாள். மொர்தெகாய் அதைத் தெரிவிக்கவேண்டாமென்று அவளுக்குக் கற்பித்திருந்தான்.

எஸ்தரின் சரித்திரத்தில் இந்த 10 வது வசனம் முக்கியமானதொரு செய்தியைத் தருகிறது. தான் யூதகுலத்தவள் என்பதனையும், தன் பூர்வோத்திரத்தையும் ஒருவருக்கும் அறிவிக்கவேண்டாம் என்று மொர்தெகாய் அவளுக்குக் கற்பித்திருந்தான்.

வசனம் 2:11

எஸ்தருடைய சுகசெய்தியையும் அவளுக்கு நடக்குங்காரியத்தையும் அறிய மொர்தெகாய் நாடோறும் கன்னிமாடத்து முற்றத்துக்கு முன்பாக உலாவுவான்.

மொர்தெகாய் எஸ்தரைக் குறித்து என்ன நினைத்தான்? எஸ்தருக்கு ஏற்பட்டவைகளைக்குறித்து அவன் மகிழ்ச்சியடைந்தானா? நாமறியோம். ஆனால் எஸ்தருடைய சுக செய்தியையும், அவளுக்கு, நடக்குங்காரியத்தையும் அறிய

மொர்தெகாய் நாடோறும் கன்னிமாடத்து முற்றத்துக்கு முன்பாக உலாவுவான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். அவள் அவனுக்கு ஓர் அன்பு மகளாகவிருந்ததாள், மிகக் கவனத்துடன் தொடர்ந்து அவளைக் கவனித்து வந்தான். கலா.4:4-7ல் கூறப்பட்டுள்ளபடி தேவனாகிய கர்த்தர், நாம் புத்திர சுவிகாரத்தையடையும்போது.... தேவனுடைய சுதந்தரவாளியாயிருக்கச் செய்வதுபோல்.... மொர்தெகாயும் எஸ்தருக்குச் செய்துவந்தான் எனலாம்.

வசனம் 2:12-13

ஒவ்வொரு பெண்ணும் ஆறுமாதம் வெள்ளைப்போளத்தினாலும், ஸ்திரீகளுக்குரிய மற்றச் சுத்திகரிப்புகளினாலும் ஜோடிக்கப்படுகிற நாட்கள் நிறைவேறி, இவ்விதமாய் ஸ்திரீகளின் முறைமைப்படி பன்னிரண்டுமாதமாகச் செய்யப்பட்டுத் தீர்ந்தபின்பு, ராஜாவாகிய அகாஸ்வேருவினிடத்தில் பிரவேசிக்க அவளவளுடைய முறை வருகிறபோது, இப்படி ஜோடிக்கப்பட்ட பெண் ராஜாவினிடத்தில் பிரவேசிப்பாள். கன்னிமாடத்திலிருந்து தன்னோடேகூட ராஜ அரமனைக்குப்போக, அவள் தனக்குவேண்டுமென்று கேட்பவையெல்லாம் அவளுக்குக் கொடுக்கப்படும்.

இராஜா, தெரிந்தெடுக்கப்பட்டுக் கன்னிமாடத்தில் வைக்கப்பட்டிருந்த பெண்களைக் காண, உடனே செல்லவில்லை. முதலில் அவர்களைச் சுத்திகரித்து, அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆறுமாதம் வெள்ளைப்போளத் தைலத்தினாலும், ஆறுமாதம் சுகந்தவர்க்கங்களினாலும், ஸ்திரீகளுக்குரிய சுத்திகரிப்புகளினாலும் ஒவ்வொரு பெண்ணும் சுத்திகரிக்கப்பட்டாள். அகாஸ்வேரு இராஜாவினால் பார்க்கப்படுமுன் ஓராண்டுகாலம் கடக்கவேண்டியதாயிருந்தது. ஆனால் இராஜா எவ்வாறு தன்னைச் சுத்திகரித்துக்கொண்டான் என்பதைப்பற்றி ஏதும் கூறப்படவில்லை.

வசனம் 2:14

சாயங்காலத்திலே அவள் உள்ளே பிரவேசித்து, காலமே, அபிமான ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய சாஸ்காசுடைய இரண்டாம் மாடத்துக்குத் திரும்பிவருவாள். ராஜா தன்னை விரும்பிப் பேர்சொல்லி அழைப்பித்தாலொழிய அவள் ஒருபோதும் ராஜாவினிடத்தில் பிரவேசிக்கக்கூடாது.

இராஜாவினால் பார்க்கப்படவேண்டிய அவளவளுடைய முறைவருகிறபோது, தன்னோடேகூட இராஜ அரண்மனைக்குப்போக, அவள் தனக்கு வேண்டுமென்று கேட்பவைகளையெல்லாம் அவளுக்குக் கொடுக்கப்பட்டன. சாயங்காலத்திலே அவள் உள்ளே பிரவேசித்து, காலமே, அபிமான ஸ்திரீகளைக் காவல் பண்ணகிற இராஜாவின் பிரதானியாகிய சாஸ்காசுடைய விசாரிப்புக்ளுள்ளிருந்த இரண்டாம் மாடத்திற்கு அவள் வந்துவிட வேண்டும். இராஜா தன்னை விரும்பிப் பேர் சொல்லி அழைப்பித்தாலொழிய, அவள் மறுபடியும் ஒருபோதும் இராஜாவினிடத்தில் பிரவேசிக்கக்கூடாது. இது ஒரு சிறந்த அமைப்பு முறை

என்று கூறப்பட இயலாது. இராஜஸ்திரீயாக ஏற்றுக்கொள்ளப்படாத அழகிகள் தங்களின் வாழ்நாளெல்லாம் ஒரு கன்னிமாடத்திலே தங்கியிருக்க வேண்டியதுதான். எஸ்தரை அன்பு மகளாய் எண்ணியிருந்த மொர்தெகாயும் இந்த நிலையில் எஸ்தரை எண்ணிப்பார்க்க மிகவும் கவலைகொண்டிருப்பானன்றோ?

வசனம் 2:15

மொர்தெகாய் தனக்குக் குமாரத்தியாய் ஏற்றுக்கொண்டவளும், அவன் சிறியதகப்பனாகிய அபியாயேலின் குமாரத்தியுமான எஸ்தர் ராஜாவினிடத்தில் பிரவேசிக்கிறதற்கு முறைவந்தபோது, அவள் ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய யேகாய் நியமித்த காரியமேயல்லாமல் வேறொன்றும் கேட்கவில்லை. எஸ்தருக்குத் தன்னைக் காண்கிற எல்லார் கண்களிலும் தயை கிடைத்தது.

எஸ்தர் இராஜாவைக் காணச் செல்லவேண்டிய முறை வந்தது. இந்த இளம் அழகியைப்பற்றிய வேறோரு செய்தியை நாம் இங்கு வாசிக்கிறோம். அவள், பிரதானியாகிய யேகாயின் நல்லாலோசனையை ஏற்றுச் செல்கிறாள். அவன் சொன்ன காரியமேயல்லாமல் வேறொன்றையும் அவள் கேட்கவில்லை. இதுபோன்று நாம் யாவரும் செய்வது மிகவும் கடினம். ஒரு காரியத்தைச் செய்யும்போது, அதற்குரியதான மிகவும் சிறந்தவழி எது என்று நமக்குத் தெரியும் என நாம் எண்ணுகிறோம். ஆனால் இங்கே ஓரிளம் பெண்ணை நாம் பார்க்கிறோம். அவளுடைய சொந்த அழகின் காரணமாகத்தான் அவள் தேர்ந்தெடுக்கப்பட்டாள். ஆனால், எதை அணிந்து செல்லவேண்டும், எதை உடன்கொண்டு சென்று இராஜாவைக் காணல் நலம், என்பவைகளுக்காக மற்றொருவர் கூறும் ஆலோசனையைப் பொறுமையுடன் கேட்டு அதற்கு உடன்படும் பண்பினை அவளிடம் காண்கிறோம். யேகாய் நியமித்த காரியமேயல்லாமல் வேறொன்றும் அவள் கேட்கவில்லை என்று வேதம் கூறுகிறது. அதன் விளைவாக, எஸ்தருக்குத் தன்னைக் காண்கிற எல்லார் கண்களிலும் தயை கிடைத்தது எனக்காண்கிறோம். அது அவளுடைய சரீர அழகு மட்டுமல்ல- அவளுடைய அகத்தின் அழுகும்கூட.

வசனம் 2:16-17

அப்படியே எஸ்தர் ராஜாவாகிய அகாஸ்வேரு அரசாளுகிற ஏழாம் வருஷம் தேபேத் மாதமாகிய பத்தாம் மாதத்திலே ராஜாவினிடத்தில் அரமனைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டாள். ராஜா சகல ஸ்திரீகளைப்பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்புவைத்தான். சகல கன்னிகைகளைப்பார்க்கிலும் அவளுக்கு அவன் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது. ஆகையால் அவன் ராஜகிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரியாக்கினாள்.

இராஜா சம்மதிக்கிறான், ஏனென்றால் சகல ஸ்திரீகளைப் பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்புவைத்தான். சகல கன்னிகைகளைப் பார்க்கிலும் அவளுக்கு அவன் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது என்று இந்த வசனம் கூறுகிறது. எஸ்தரின் புத்தகத்தில் இந்த வசனத்தில்தான் அன்பு, பட்சம் என்று வாசிக்கிறோம். இதைவிட அதிக முக்கியமாக அவன் இராஜகிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான். ஆம், இங்கே அனாதையான ஒரு யூத பெண்பிள்ளை, வேறு ஒரு நாட்டில், தத்துப் பிள்ளையாக ஒரு சகோதரனால் வளர்க்கப்பட்ட எஸ்தர், அதே நாட்டில் பட்டத்து இராணியாக அமர்த்தப்படுகிறாள் என்றால் இவை அனைத்திலும் கர்த்தருடைய கரம் வலுவாக இருப்பதை யாரால் மறுக்கமுடியும்?

வசனம் 2:18

அப்பொழுது ராஜா தன்னுடைய எல்லாப் பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும், எஸ்தரினிமித்தம் ஒரு பெரிய விருந்துசெய்து, நாடுகளுக்குச் சலக்கரணை உண்டாக்கி, ராஜஸ்திதிக்குத்தக்க வெகுமானங்களைக் கொடுத்தான்.

அப்போது இராஜா, இராஜஸ்திரீயாகிய எஸ்தரினிமித்தம் பெரிய விருந்து ஒன்றை நடத்தினான். அந்த விருந்திற்கு தன்னுடைய எல்லாப் பிரபுக்களையும், ஊழியக்காரரையும் அழைப்பித்திருந்தான். எஸ்தரின் விருந்து என்று அழைக்கப்பட்ட அந்த விருந்து நாளை அரசு விடுமுறை நாளாக அறிவித்து, இராஜஸ்திதிக்குத் தக்க வெகுமானங்களைக் கொடுத்தான். எஸ்தரைக் குறித்து மிகவும் மகிழ்ந்திருந்தான் இராஜா.

வசனம் 2:19-20

இரண்டாந்தரம் கன்னிகைள் சேர்க்கப்படும்போது, மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருந்தான்.
எஸ்தர் மொர்தெகாய் தனக்குக் கற்பித்திருந்தபடி, தன் பூர்வோத்திரத்தையும் தன் குலத்தையும் தெரிவிக்காதிருந்தாள். எஸ்தர் மொர்தெகாய் இடத்திலே வளரும்போது அவன் சொற்கேட்டு நடந்ததுபோல, இப்பொழுதும் அவன் சொற்கேட்டு நடந்துவந்தாள்.

எஸ்தர், மொர்தெகாய் தனக்குக் கற்பித்திருந்தபடி, தான் யூதகுலத்தைச் சேர்ந்தவள் என்பதை யாருக்கும் அறிவிக்காதிருந்தாள். எஸ்தர் மொர்தெகாயினிடத்தில் வளரும்போது அவன் சொற்கேட்டு நடந்ததுபோல், இப்போதும் வளரும்போது அவன் சொற்கேட்டு நடந்துவந்தாள் என்று வேதம் கூறுகிறது. எஸ்தரின் உயர்ந்த பண்புகளில் ஒன்றை நாம் இங்கு காணமுடிகிறது. அவள் கீழ்ப்படிதலுள்ளவளாக இருந்தாள். இப்போது அவள் ராஜஸ்திரீ. அவள் தனது வளர்ப்புத்தந்தையின் கட்டளைகளையும், அவனுடன் தனது வீட்டில் இருக்கும் போது அவனுக்குக் கீழ்ப்படிந்து இருந்ததுபோலவே இப்போதும் கீழ்ப்படிந்து இருந்தாள். அவளுடைய நன்மதிப்பையும் அன்பையும் மொர்தெகாய் பெற்றிருந்தான். அதை அவள் விளங்கப்பண்ணவும் விரும்பினாள். இங்கே

தேவனுடைய பிள்ளைகளாகிய நமது பெற்றோரும் உற்றோரும் நம்மை அன்பாக காத்து வளர்த்ததை எண்ணி நாம் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையைப்பற்றி உணர்ந்துகொள்ள முடிகிறதல்லவா?

வசனம் 2:21-23

அந்நாட்களில் மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருக்கிறபோது, வாசல்காக்கிற ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானும் தேரேசும் வர்மம் வைத்து, ராஜாவாகிய அகாஸ்வேருவின்மேல் கைபோட வகைதேடினார்கள். இந்தக் காரியம் மொர்தெகாய்க்குத் தெரியவந்ததினால், அவன் அதை ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான். எஸ்தர் மொர்தெகாயின் பேரால் அதை ராஜாவுக்குச் சொன்னாள். அந்தக் காரியம் விசாரிக்கப்படுகிறபோது, அது மெய்யென்று காணப்பட்டது. ஆகையால் அவர்கள் இருவரும் மரத்திலே தூக்கிப்போடப்பட்டார்கள். இது ராஜ சமுகத்தில் நாளாகமப்புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது.

அந்நாட்களில் மொர்தெகாய் ராஜாவின் அரண்மனை வாசலில் உட்கார்ந்திருக்கிறபோது... என்று கூறப்பட்டுள்ள வார்த்தைகள், அவனுக்கு ஒரு பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. வாசலில் உட்காருதல் என்பது அந்த இடம் மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் உரிய இடம் என்பதை விளக்கும் வார்த்தைகளாகும். நகரங்களின் வாசலில் உட்கார்ந்திருந்த பல பெயர்களை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். லோத்து (ஆதி.19:1) போவாஸ் (ரூத் 4:1) அடுத்து இராஜாவின் வாசல் காக்கிற இருவரான, பிக்தானும், தேரேசுமான ஒரு பிரதானிகளான வாசற்காவலாளர் (ரூத் 6:2) களைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அவர்கள் ஏதோ சில காரணங்களுக்காக அகாஸ்வேரு இராஜாவின்மேல் மிகக் கோபமடைந்து அவனைக் கொலைசெய்ய ஒரு சதித்திட்டம் தீட்டினார்கள். இது மெல்ல மொர்தெகாயின் காதுக்கெட்டியது. இராஜா கொலை செய்யப்பட இருப்பது மொர்தெகாய்க்குத் தெரிந்தவுடன், அவன் அதை எஸ்தருக்கு அறிவித்தான். எஸ்தர் அந்தச் செய்தியை மொர்தெகாயின் பேரால் இராஜாவுக்குச் சொன்னான்.

இராஜா உடனே இதுபற்றி விசாரிக்க கட்டளையிட்டான். அது விசாரிக்கப்பட்டு உண்மைதான் என்று கண்டுபிடிக்கப்பட்டது. சததித்திட்டம்போட்ட இருவரும் தூக்கிலே போடப்பட்டனர். இந்த வர்த்தமானங்கள் இராஜசமுகத்திலே அவன் நாளாகப் புத்தகத்தில் எழுதி பதிவுசெய்து வைக்கப்பட்டது. ஆனால் மொர்தெகாய்க்கு எந்தவிதமான கௌரவமும் அளிக்கப்பட்டதாக வேதத்தில் இல்லை. அல்லது மொர்தெகாய் இதைப்பற்றி என்ன எண்ணினான் என்றும், வேதத்தில் கூறப்படவில்லை. இது ஒரு ருசிகரமான சம்பவம் மட்டுமே. இதற்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏதுமில்லை என நினைக்கத்தோன்றும். அப்படியாயின் அது ஏன் வேதத்தில் குறிக்கப்படவேண்டும்.? ஆம், அதற்கு ஒரு நல்ல காரணமுண்டு. அது தேவனுடைய திட்டத்தின் அடுத்தபடியாகும்.

### அதிகாரம் 3

## ஆமானின் சதித்திட்டம்

வசனம் 3:1

இந்த நடபடிகளுக்குப்பின்பு, ராஜாவாகிய அகாஸ்வேரு அம்மெதாத்தின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியனை மேன்மைப்படுத்தி, தன்னிடத்திலிருக்கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனுடைய ஆசனத்தை உயர்த்திவைத்தான்.

யாவும் நலமுாகவே நடந்தேறின. அகாஸ்வேரு இராஜா எஸ்தரை அதிகம் நேசித்து, அவளைச் சகல இராஜ அந்தஸ்துடன் இராஜஸ்திரீயாக எற்படுத்தினான். அவளது வளர்ப்புத் தந்தையான மொர்தெகாய், இராஜாவினால், மதிப்பிற்குரிய ஒரு பதவிக்கு நியமனம் பெற்று, இராஜ விசுவாசமுள்ள குடிமகனாய் விளங்கினான். கவலைப்படும்படி யாதொன்றும் ஏற்படவில்லை என்று நினைத்துச் சொல்லி முடியுமுன்பே, அந்தோ! அது போன்ற சுமூக நிலை எங்குமிருக்கவே முடியாது, அல்லது கூடவே கூடாது என்னும் அளவில் ஒரு வஞ்சகன் நமது சரித்திரத்தின் உள்ளே நுழைந்துவிட்டதைக் காணமுடிகிறது. ஆமான் என்பது அவன் பெயர். அரசு ஆட்சியாளர்களுடன் சகல பிரபுக்களுக்கும், இளவரசர்களுக்கும் மேலாக அவன் அமர்த்தப்பட்டிருந்தான். இந்த ஆமான் யார்? அவன் ஓர் ஆகாகியன் என்பதைத் தவிர வேறொன்றும் அவனைப்பற்றி பூர்வீகம் இங்கு கூறப்படவில்லை. ஆகாகியன் எனப்படும்போது, அமலேக்கியர்களின் இராஜாவாக இருந்த ஆகாக் என்பவனின் வம்ச வழி வந்தவன் என நாம் அறியமுடிகிறது (1.சாமு.15:32). இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுபட்டு வந்த காலத்தில் வனாந்தரங்களில் திரிந்து அலைந்த நாட்களில் அவர்களை மூர்க்கமாய் எதிர்த்துப் போரிட்டவர்கள் இந்த அமலேக்கியர் (யாத்17:8-16). தேவன் இஸ்ரவேலரிடத்தில் இந்த அமலேக்கியரைப்பற்றி எச்சரித்து, அவர்களையும், அவர்கள் செய்தவைகளையும் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளார். அவர்கள் யூதர்களின் பகைஞர் ஆவர். ஆனபடியால், இங்கே, யூதர்களுக்குப் பகைவனான ஒருவன்- ஆமான் இராஜாவிற்கு அடுத்தபடியான ஓர் உயர்ந்த பதவியில் இருக்கும் இந்த நிலையில், இராஜஸ்திரீயான எஸ்தர் ஒரு யூத இனப் பெண்மணியாயிருக்கிறாள். ஆனால் நல்லவேளையாக அந்த உண்மை யாரொருவருக்கும் தெரியாமலிருந்தது. எனவே யாவும் அமைதியாக அமையும் என நாம் எண்ணக்கூடும். ஆனால் அதுதான் இல்லை!

வசனம் 3:2-4

ஆகையால் ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் எல்லாரும் ஆமானை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள். அவனுக்கு இப்படிச் செய்யவேண்டும் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான். ஆனாலும் மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை. அப்பொழுது ராஜாவின்

அரமனைவாசலிலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் மொர்தெகாயைப் பார்த்து: நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன என்று கேட்டார்கள். இப்படி அவர்கள் நாளுக்குநாள் அவனுடனே சொல்லியும், அவன் தங்களுக்குச் செவிகொடாதபோது, தான் யூதன் என்று அவன் அவர்களுக்கு அறிவித்திருந்தபடியால், மொர்தெகாயின் சொற்கள் நிலைநிற்குமோ என்று பார்க்கிறதற்கு, அதை ஆமானுக்கு அறிவித்தார்கள்.

ஆமான், இந்த அகாஸ்வேருவின் அரண்மனையில் மிகமுக்கியமானதொரு பதவியில் இருந்ததினால், அவன் அரண்மனை வாசல் வழியாகக் கடந்து செல்லும்போது இராஜாவின் ஊழியக்காரர் எல்லாரும் ஆமானை வணங்கி, நமஸ்கரிக்க வேண்டுமென்று இராஜா கட்டளை விதித்திருந்தான். அதற்குக் கீழ்ப்படிந்து, எல்லாரும், ஆமான் இரதத்திலாவது, குதிரையிலமர்ந்தாவது வெளியிலே செல்லும்போது அவனை வணங்கி நமஸ்கரித்து வந்தனர். எல்லாரும் வணங்கினார்கள். மொர்தெகாய் தவிர, மொர்தெகாய் மட்டும் ஆமானை வணங்கினதுமில்ல அவனை நமஸ்கரித்ததுமில்லை. ஆமான் யார் என்பது மொர்தெகாய்க்குத் தெரியாதா, என்ன? நன்றாகத் தெரியும். ஆனாலும் அவனை வணங்கவேண்டும் என்ற எண்ணம் சிறிதும்கூட அவனுக்கு ஏற்படவில்லை.

அரண்மனை வாசலில் நின்ற ஊழியக்காரார், தாங்கள் ஆமானைத் தாழ வணங்கி நிற்கும்போது மொர்தெகாய் மட்டும் வணங்காமலிருந்ததைக் கண்டு அவனைக் கேள்விகேட்க ஆரம்பித்தனர். அவர்கள் ஓயாமல் நச்சரித்துக் கேட்டுக்கொண்டேயிருந்தபடியினால், தான் ஒரு யூதன் என்பதனைக் கூறி வணங்காததன் காரணத்தை விளங்கினான். யூதர்களின் பகைஞனான ஆமானை (3:10) அவன் ஒருபோதும் வணங்கப்போவதில்லை. (பாவத்திற்கு ஒருபோதும் தலைவணங்காத நமது ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவைப்போல்) அன்று முதல் மொர்தெகாயின் சொற்கள் நிலைநிற்குமோ என்று பார்க்கிறதற்கு, மொர்தெகாயின் வணங்காமையையும் அவன் யூதன் என்று சொன்னதையும் அவர்கள் ஆமோனிடம் சொன்னார்கள்.

வசனம் 3:5-6

ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோது, மூர்க்கம் நிறைந்தவனானான். ஆனாலும் மொர்தெகாயின்மேல்மாத்திரம் கைபோடுவது அவனுக்கு அற்பக்காரியமாகக் கண்டது. மொர்தெகாயின் ஜனங்கள் இன்னாரென்று ஆமானுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபடியால், அகாஸ்வேருவின் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகைதேடினான்.

ஆகவே, அடுத்தமுறை வாசலைக் கடந்து செல்லுகையில், ஆமான் அங்கு நின்றிருந்த ஊழியக்காரர்களைக் கவனத்துடன் நோக்கலானான். யாவரும் வணங்கி நமஸ்கரிக்கிறார்களே! ஆம், ஒருவன் மட்டும்? யார் அவன்? அவன்தான் யூதனான மொர்தெகாய். என்ன துணிச்சல்! ஆமானுக்கு

மூர்க்கவெற்றி ஏற்பட்டது. என்ன திமிர்! என்னை இந்த ஆமானை இராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் மகிமைப் பிரதாபம் விளங்க இருக்கும் என்னை வணங்காமல் இருக்கும் இவனை நான் பழிவாங்காமல் இருப்பேனோ? என்றெல்லாம் எண்ணக்கூடிய ஆமானை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா? உண்மையிலேயே உயர்ந்தநிலையில் இருக்கும் ஒருவன், தன்னை வணங்கவில்லை என்ற குற்றம் செய்யத ஒரு யூதனைப் புறக்கணித்து விட்டுப் போயிருப்பான். ஆனால் இந்த ஆமானின் பெருமை பண்பிற்கு இது ஒரு சவாலாக இருந்தது.

பெருமை என்பது எத்தனை கொடியது என்பதை வேதம் விளக்கிக்கூறுகிறது. சாத்தானின் வீழ்ச்சிக்குக் காரணம் இந்த பெருமையே (ஏசா.14:12-15). இந்த மேட்டிமைதான் கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் முதன்மையானது (நீதி.6:16-17, 1.யோ.2:16). ஆனாலும் நாமும் சில வேளைகளில் பெருமை கொள்கிறோமன்றோ?

ஆமான் எத்தகையவன் என்பதை நாம் அறியமுடிகிறது. அவன் பழிவாங்க நினைக்கிறான். அனால் மொர்தெகாய் மீதல்ல. அந்த இராஜ்யத்தில் இருந்த அனைத்து யூதர்களையும் பழிவாங்க எண்ணினான். பழிவாங்க என்று சொல்லும்போது ஒரு சிறு தண்டனை மூலமல்ல, மரணம் விளைவிக்கவே அவன் எண்ணுகிறான். மரணமா? ஒரு யூதன் தன்னை வணங்கவில்லையென்பதற்காக அனைத்து யூதர்களையும் கொன்று குவிக்க ஒருவன் எண்ணுவானோ? இருக்கமுடியாது என்றுதான் நாம் எண்ணுவோம். ஆனால் அவன் யூதர்கள் அனைவரையும் கொல்லவே நினைத்தான். ஒரே ஓர் ஆளை மட்டுமே கொன்றால் அது அவனுடைய சுய கௌரவத்திற்கு இழுக்கு என்று அவன் எண்ணினான்போலும். அனைத்து யூதர்களையும் கொல்ல நினைத்தான். அந்த அனைத்து யூதர்களையும் அழிக்க எண்ணினான். ஏன்? ஒரு யூதன் அவனை வணங்கவில்லையெனில் அனைத்து யூதர்களுமே அவனை வணங்கமாட்டார்கள் என்று அவன் எண்ணினான்.

அப்படி அனைத்து யூதர் இனத்தையும் அழிக்க அவனால் கூடுமா? பார்வோன் இராஜா எகிப்திலே, யூதர்கள் பலுகிப் பெருகுவதைப் பார்தபோது, மருத்துவச்சிகளோடு பேசி பிறக்கும் ஆண்பிள்ளைகள் அனைத்தையும் கொன்றுபோடும்படி கட்டளையிட்டானன்றோ (யாத்.1:16). எருசலேமின் இராஜாவாகிய ஏரோது, யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே என்று சாஸ்திரிகள் கூறக்கேட்டபோது, தனது சிம்மாசனம் பறிபோகும் என்று பயந்து இரண்டு வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகளையெல்லாம் கொன்று போட்டதை வேதம் கூறுகிறதல்லவா (மத்.2:16)? இங்கே குழந்தைகள். எல்லா காலங்களிலும் சாத்தான் யூதர்களை அழிக்க எப்போதுமே செயல்பட்டுவந்துள்ளான் இங்கே ஆமான் மூலம் அதைச் செய்ய முயற்சிக்கிறான்.

வசனம் 3:7-8

ராஜாவாகிய அகாஸ்வேருவின் பன்னிரண்டாம் வருஷம் நிசான் மாதமாகிய முதலாம் மாதத்திலே ஆமானுக்கு முன்பாகப் பூர் என்னப்பட்ட சீட்டு ஒவ்வொரு நாளையும் குறித்துப் போடப்பட்டு, ஆதார்மாதமான பன்னிரண்டாம் மாதத்தின்மேல் விழுந்தது. அப்பொழுது ஆமான் அகாஸ்வேரு ராஜாவைப் நோக்கி: உம்முடைய ராஜ்யத்தின் சகல நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒருவித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது. அவர்கள் ராஜாவின் சட்டங்களைக் கைக்கொள்ளுகிறதில்லை. ஆகையால் அவர்களை இப்படி விட்டிருக்கிறது ராஜாவுக்கு நியாயமல்ல.

இதுபோன்றதொரு கொலை திட்டத்தை ஒருவன் செய்ய முற்படும்போது அந்த அரசில் அவனுக்கு எத்தகைய செல்வாக்கு இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்க முடிகிறதல்லவா? இந்தக் கொடுமையான திட்டத்தை நிறைவேற்றத் தக்கதருணம் வரும்வரை அவன் பொறுமையோடே காத்திருந்தான். அந்தச் சரியான நாளைக் கண்டுபிடிக்க அவன் சீட்டுப்போட்டான் என்று வேதம் கூறுகிறது. அந்த நன்னாள் வந்தபோது ஆமான் அகாஸ்வேரு இராஜாவை நோக்கி, யூதர்களைக் குற்றஞ்சுமத்தி, உம்முடைய இராஜ்யத்தின் சகல நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒருவித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது. அவர்கள் இராஜாவின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதில்லை. ஆகையால் அவர்களை இப்படி விட்டிருக்கிறது இராஜாவுக்கு நியாயமல்ல என்று கூறினான்.

அவன் குற்றுஞ்சுமத்திக் கூறியதை மறுபடியும் கூர்ந்து கவனித்தால், அவன் முதலில் கூறிய வாசகம், அதாவது சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள் என்பது உண்மையே. அவர்களின் வழக்கங்கள் வேறானவை என்பது உண்மையே. ஏனெனில் அவை பரிசுத்த தேவனின் சட்டங்களான வழக்கங்கள். அவை யாரையும் பாதிக்காதவை. அடுத்து, உள்ள கூற்று அப்பட்டப் பொய்யாகும். அவர்கள் இராஜாவின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதில்லை என்பது உண்மையல்ல. அவர்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்திருந்தனர். அவர்கள் நல்ல குடிமக்கள். அவர்கள் நாட்டில் இருப்பது நாட்டிற்கு நன்மையேயாகும். யூதர்களை மதித்து நடத்துகிற எந்த நாடும் ஆசீர்வதிக்கப்பட்டதாகவே இருக்கும். இங்கே சாத்தான் ஆமானை தனக்கு ஒரு கருவியாகவே பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறான். உண்மையும் பொய்யும் கலந்த ஒரு கூற்றைப் பொழிகிறான். இதுபோன்ற புரட்டுக்கள் செய்வதில் வல்லவனான சாத்தானின் செய்கைளுக்கு நாம் மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டுமன்றோ?

வசனம் 3:9

ராஜாவுக்கு சம்மதியானால், அவர்களை அழிக்கவேண்டுமென்று எழுதி அனுப்பவேண்டியது. அப்பொழுது நான் ராஜாவின் கஜானாவில் கொண்டுவந்து

செலுத்த பதினாயிரம் தாலந்து வெள்ளியை எண்ணிக் காரியக்காரர் கையில் கொடுப்பேன் என்றான்.

ஆமான், தான் கண்டு மன்னருக்கு அறிவித்த சிக்கலுக்குப் பதிலும் அளிக்கத் தயாராக இருக்கிறான். அவர்கள் அழியவேண்டும் என்கிறான். அதுமட்டுமா? அவர்கள் முற்றிலும் அழிக்கப்பட நான் இராஜாவின் கஜானாவிலே கொண்டுவந்து செலுத்த பதினாயிரம் தாலந்து வெள்ளியை எண்ணிக் காரியக்காரர் கையில் கொடுப்பேன் என்று கூறுகிறான். இப்போது இராஜா, பணம் கொடுக்கும் ஆமானுக்காக, அவன் வெறுக்கும் சிலரை ஒழித்துக்கட்ட முற்படுகிறான். எத்தனை எளிதாகக் காரியங்கள் நடைபெறுகின்றன.

வசனம் 3:10-11

அப்பொழுது ராஜா தன் கையிலிருக்கிற தன் மோதிரத்தைக் கழற்றி, அதை ஆகாகியனான அம்மெதாத்தின் குமாரனும் யூதரின் சத்துருவுமாகிய ஆமானிடத்தில் கொடுத்து, ஆமானை நோக்கி: அந்த வெள்ளியை நீ வைத்துக்கொள். அந்த ஜனத்துக்கு உன் இஷ்டப்படி செய்யலாம் என்றான்.

இராஜா அதற்குமேல் அதைப்பற்றி ஏதும் சிந்திக்கவில்லை. இந்த ஆமான் வெறுக்கும் இவர்கள் யார் என்றுகூட அவன் விசாரித்தறிய விரும்பவில்லை. அவனுடைய முத்திரை மோதிரத்தைக் கழற்றி அதனை முத்திரையிடுவதற்காக ஆமானிடத்தில் கொடுத்துவிட்டான். அந்த ஜனத்திற்கு உன் இஷ்டப்படி செய்யலாம் என்று அவன் கூறினான். அவன் அனுமதி வழங்குகிறான் என்றால் ஓரினமே அழிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதன்றோ?

இப்புத்தகத்தின் முதல் அதிகாரத்தில், வஸ்தியைப்பற்றி கடுங்கோபங்கொண்டபோது, தேசத்தின் சட்டப்படி அவளுக்குச் செய்ய வேண்டியது என்ன என்று விசாரித்ததை நாம் வாசித்தோமன்றோ? ஆனால் இங்கே அவர்கள் செய்த தவறுதான் என்ன என்பதனைக்கூட அறிந்து கொள்ளுமுன்பே ஆயிரக்கணக்கிலான யூதர்களை மரணத்திற்கு தீர்க்கிறான். ஏன் அப்படி?

1. அரசின் அதிகாரம் தவறான ஒருவன் கையில் இருக்கிறது. உனது வாழ்க்கையில் உன்மேல் அதிகாரம் செலுத்தக்கூடியவர் யாரேனும் உளரோ?
2. அவன் பொய்யையும் மெய்யையும் கலந்து சொல்லப்பட்ட ஆமானின் கூற்றை முழுவதும் நன்பினானல்லவா? இப் பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் என்று வேதமே கூறுகிறதே (2.கொரி.4:4).
3. செல்வத்தின் சக்தி அவனை வளைய வைத்ததெனலாம். அந்த அகாஸ்வேரு எவ்வளவு செல்வமுடையவன் என்பதை நாம் முதலாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அவன் அந்தச் செல்வத்திலேயே உழலவிரும்பினான். ஆனால் இராஜாவின் கஜானாவிற்கு ஆமானே பொறுப்பாளனாகவும்

இருந்ததினால் அவனுடைய தீய திட்டங்களுக்கு அரசின் செல்வத்தைக்கூட பயன்படுத்தக்கூடிய நிலையில் அவன் இருந்தான்.

ஆமானுக்கு இராஜாவின் முத்திரை மோதிரம் ஏராளமான வெள்ளி மற்றும், அவனுடைய திட்டங்களில் அவனுக்குக் கீழ்ப்படிந்து நிற்கும் ஏவலாளர் ஆகிய அனைத்தும் கிடைத்துவிட்டன. ஒரே வாக்கியத்தில் சொல்லப்போனால் இராஜாவின் அதிகாரம் அனைத்தும் அவன் கையில் கொடுக்கப்பட்டிருந்தது எனலாம். இவையனைத்தும் மிகக் குறுகிய காலத்திலே நடந்து முடிந்துவிட்டன. ஆனால், நிதானமாகவும், அமைதியாகவும் ஆமான் இராஜாவின் நம்பிக்கைக்குத் தன்னை உரியவனாக்கிக் கொண்டிருந்தான். இது சாத்தானுடைய வேலையே. உண்மைகளையும் பொய்யையும் கலந்து நமது சிந்தனைகளைத் தொடக்கூடியதாய் அவன் செயல்படுவான்.

வசனம் 3:12

முதலாம் மாதம் பதின்மூன்றாந்தேதியிலே, ராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்கள். ஆமான் கற்பித்தபடியெல்லாம் ராஜாவின் தேசாதிபதிகளுக்கும், ஒவ்வொரு நாட்டின்மேல் வைக்கப்பட்டிருந்த துரைகளுக்கும், ஒவ்வொரு ஜனத்தின் பிரபுக்களுக்கும், அந்தந்த நாட்டில் வழங்கும் அட்சரத்திலும், அந்தந்த ஜாதியார் பேசும் பாஷையிலும் எழுதப்பட்டது. ராஜாவாகிய அகாஸ்வேருவின் பேரால் அது எழுதப்பட்டு, ராஜாவின் முத்திரை போடப்பட்டது.

ஆமான் மிகவும் துரிதமாகச் செயல்ப்பட்டான். அவன் இராஜாவின் சம்பிரதிகளை அழைத்து, அந்த நாட்டில் வழங்கும் அஷரத்திலும், மொழியிலும், இராஜாவின் பேரால் கடிதங்கள் எழுதி, மோதிரத்தினால் முத்திரையிட்டு, அதிகாரிகளுக்கும், நாட்டில் இருந்த பிரபுக்களுக்கும் அந்தக் கடிதங்களை அஞ்சல்காரர் மூலம் அனுப்பிவைத்தான்.

அவன் அவ்வளவு அவசரமாக எழுதியனுப்பிய செய்திதான் என்ன? 12ம் மாதம் 13ம் தேதியாகிய ஒரே நாளிலே, சிறியோர், பெரியோர், குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் கொன்று நிர்மூலமாக்கவேண்டும் என்பது அந்தக் கட்டளை. கொல்ப்பட்டபின் அவர்களுடைய பொன்னும் பொருளும் கொள்ளையிடப்படவேண்டும். ஒருவேளை அந்தக் கொள்ளையின் மூலம்தான் ஆமான் இராஜாவிற்குக் கொடுப்பதாகச் சொன்ன வெள்ளியைப் பெற எண்ணினான்போலும்!

வசனம் 3:13-15

ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியாகிய ஒரே நாளிலே சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும், அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள்

அனுப்பப்பட்டது. அந்த நாளுக்கு ஆயத்தப்பட்டிருக்கவேண்டும் என்று சகல ஜனங்களுக்கும் கூறி அறிவிக்கிறதற்காகக் கொடுக்கப்பட்ட கட்டளையின் நகல் இதுவே, இது ஒவ்வொரு நாட்டிலும் பிரசித்தம்பண்ணப்பட்டது. அந்த அஞ்சற்காரர் ராஜாவின் உத்தரவினால் தீவிரமாய்ப் புறப்பட்டுப் போனார்கள். அந்தக் கட்டளை சூசான் அரமனையில் பிறந்தது. ராஜாவும் ஆமானும் குடிக்கும்படி உட்கார்ந்தார்கள். சூசான் நகரம் கலங்கிற்று.

அது அரச கட்டளையென மதிக்கப்பட்டதால், அந்தக் கடும் கட்டளை காற்றெனப் பறந்துசென்றது. அந்தக் கட்டளை, அஞ்சல்காரர்களின்மூலம், குதிரைகளின்மீதும், ஒட்டகங்களின்மீதும் வேகமாய் அனுப்பப்பட்டு ஒவ்வொரு நகரத்திலும் பட்டணத்திலும் எல்லா மொழிகளிலும், மக்கள் மத்தியில் வாசிக்கப்பட்தை எண்ணிப் பாருங்கள். தலைநகரான சூசான் நகரத்திலும் அந்தக் கட்டளை அறிவிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட நாளில் ஒவ்வொரு நகரத்திலும், மக்கள் கொதித்தெழும்பி, யூதர்களான நண்பர்களையும், அயலகத்தார்களையும் கொன்று குவிக்கவேண்டுமென்பது இராஜகட்டளை. ஒருவேளை அவர்கள் திருமண உறவுகளினால் உறவினர்களாகவும் இருந்திருக்கக்கூடும். நீ ஒருவேளை அங்கேயிருந்தவர்களில் ஒருவனாய் இருந்திருந்தால் என்ன எண்ணியிருப்பாய். அதிர்ச்சிடைந்திருப்பாயன்றோ? அன்று அங்கேயிருந்தவர்களும் அப்படித்தான். சூசான் நகரம் கலங்கிற்று என்று வேதம் கூறுகிறது. இந்தக் கடுமையான, கொடுமையான கட்டளை அன்று அவர்களுக்கும், யாருக்குமே புரியவேயில்லை.

ஆனால் ஆமானும், இராஜாவும் அப்படியல்ல. அவர்கள் இருவரும் குடிக்கும்படி உட்கார்ந்தார்கள் என்று வேதம் கூறுகிறது. ஆயிரக்கணக்கான, குற்றமற்ற பலரைக் கொன்று குவிக்க உத்தரவிட்டபின், அந்த இருவரும், சேர்ந்து குடித்து மகிழ உட்கார்ந்தனர். அந்த ஆமான் ஒரு செல்வச் சீமான். மற்ற எல்லாப் பிரபுக்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு பதவி வகித்தான். இராஜாவிற்கு அடுத்தவன் அவனே. அந்தப் பதவியில் நிலையாகவும் அவனிருந்தான். அவனுடைய செயல்கள், அவன் திறமையும் கொடுமையும் நிறைந்தவன் என்பதனை நன்கு விளக்குகிறதன்றோ? ஆயினும் அவனுடைய பெருமைக்கு இழுக்கு எற்பட்ட நிலையில்தான் அவனுடைய கொடிய பண்புகள் வெளிவரத்த தலைப்பட்டன. இராஜா ஏனோ இதனைக் கவனிக்கவில்லை. அவனுடைய கொடுமைப் பண்புகளுக்கு, இராஜா ஓரந்தகனாகவேயிருந்தான். அவனை அறியாதவன் என்று கூறமுடியாது. இத்தனைக் கொடுமைகள் நடக்க அனுமதித்தவன் அவனேயன்றோ? ஆமான் செய்ய நினைத்ததனைத்திற்கும் அவன் அனுமதியளித்தானன்றோ? இராஜ ஆளுகையின் அனைத்து அதிகாரங்களயையும் கொடியவனான ஆமானிடம், அவன் அளித்திருந்தானல்லவா? நமது வாழ்க்கையின் திறவுகோலை நாம் யாரிடம் கொடுத்துவைத்துள்ளோம்? தேவனாகிய கர்த்தர் நமது வாழ்க்கையின் பிதாவாயிராவிட்டால் நாம் அகாஸ்வேரு இராஜாவைவிட எத்தவிதத்தில் சிறந்தவராக முடியும்?

அதிகாரம் 4

# தேவனிடம் ஜெபித்த யூதர்கள்

வசனம் 4:1-3

நடந்த யாவற்றையும் மொர்தெகாய் அறிந்தபோது, மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப்போய், துயரமுள்ள மகா சத்தத்துடன் அலறிக்கொண்டு, ராஜாவின் அரமனை வாசல் முகப்புமட்டும் வந்தான். இரட்டுடுத்தினவனாய் ராஜாவின் அரமனை வாசலுக்குள் பிரவேசிக்க ஒருவனுக்கும் உத்தரவில்லை. ராஜாவின் உத்தரவும் அவனுடைய கட்டளையும் போய்ச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் ஸ்தலத்திலுமுள்ள யூதருக்குள்ளே மகா துக்கமும், உபவாசமும், அழுகையும் புலம்பலும் உண்டாய், அநேகர் இரட்டுடுத்திச் சாம்பலில் கிடந்தார்கள்.

இராஜாவின் கட்டளையைக் கண்டு மக்களனைவரும் கலக்கம் அடைந்தனர். அப்படியானால் கொல்லப்பட இருந்த யூதர்களின் நிலை என்ன? அந்தக் கொடுமையான இராஜகட்டளையைக் கேள்விப்பட்ட மொர்தெகாய், தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இரட்டுடுத்தி, தனது தலையின்மேல் சாம்பலைத் தெளித்துக்கொண்டான். நகரத்தின் நடுவிலே புறப்பட்டுப்போய், துயரமுள்ள மகா சத்தத்துடன் அலறி அழுதான். அப்படியே இராஜாவின் அரண்மனை வாசல் முகப்பு மட்டும் வந்தான் உள்ளே செல்லவில்லை. இரட்டுடுத்தினவனாய் இராஜாவின் அரண்னை வாசலுக்குள் செல்ல சட்டம் யாரையும் அனுமதிக்காது. அது சட்ட விரோதம்.

மொர்தெகாய் மட்டுமா அப்படிச் செய்தான்? இராஜாவின் கட்டளை வாசிக்கப்பட்ட அனைத்து நகரங்களிலும் இருந்த யூதர்கள் அனைவரும்கூட அவ்வாறே செய்தனர். அவர்களும் அலறியழுது, உபவாசித்து, இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்திருந்தனர். இதன் பின்னணியில் நாம் தேவனை காண்கிறோம். அந்த யூதர்கள் தங்களின் உடல் நலம் கருதியா இரட்டுடுத்தி சாம்பலில் அமர்ந்திருந்தனர்? இல்லை, அவர்கள், தங்களைக் காப்பாற்றும்படி தேவனிடத்தில் மன்றாடி ஜெபித்தனர். தானியேல் புத்தகத்திலே, நான் உபவாசம்பண்ணி இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினதலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கினேன் என்று வாசிக்கிறோம் (தானி.9:3). யூதர்கள், அந்த இராஜாவின் கொடூரமான தீர்ப்பிலிருந்து மீள வழியொன்றும் காணாமல், திகைத்தனர். மேதியரின் சட்டங்கள், தீர்ப்புகள், ஒருபோதும் மாற்றப்பட்டதில்லை. அவர்களுடைய ஒரே நம்பிக்கை தேவனே.

வசனம் 4:4

அப்பொழுது எஸ்தரின் தாதிமார்களும், அவளுடைய பிரதானிகளும்போய், அதை அவளுக்கு அறிவித்தார்கள். அதினாலே ராஜாத்தி மிகவும் துக்கப்பட்டு, மொர்தெகாய் உடுத்திருந்த இரட்டை எடுத்துப்போட்டு, அவனை உடுத்துவிக்கிறதற்கு வஸ்திரங்களை அனுப்பினாள். அவனோ அவைகளை ஏற்றுக்கொள்ளாதிருந்தான்.

இப்போது எஸ்தரின் நிலையென்ன? அவள் ஒரு யூதப் பெண். ஆனால் அப்படி அவள் ஒருவரிடமும் கூறியிருக்கவில்லை. மொர்தெகாய், சில நண்பர்களிடம்தான் தான் ஒரு யூதன் என்பதைக் கூறி வெளிப்படுத்தியிருந்தான். ஆனால் எஸ்தர் ஒருபோதும் அதைக் கூறவில்லை. மேலும் இராஜாவின் புதிய கட்டளையை எஸ்தர் அறிந்துகொள்ளவில்லை. மொர்தெகாயும், இன்னும் சில யூதர்களும், இரட்டுடுத்தி புலம்பிக்கொண்டிருந்த செய்தி மட்டும் அவளுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனால் மிகவும் கவலையடைந்த எஸ்தர், மொர்தெகாய் அணிந்துகொள்வதற்காக வஸ்திரங்களை அனுப்பி, அவன் அணிந்திருந்த இரட்டுடைகளைக் களைந்துபோடச் சொல்லியனுப்பினாள். ஆனால் மொர்தெகாயோவென்றால், அவள் அனுப்பிய ஆடைகளைப் பெற்றக்கொள்ளவுமில்லை, தனது இரட்டுடைகளைக் களைந்துபோடவும் இல்லை.

வசனம் 4:5-8

அப்பொழுது எஸ்தர் தன் பணிவிடைக்கென்று ராஜாவினால் நியமித்திருந்த அவனுடைய பிரதானிகளில் ஒருவனாகிய ஆத்தாகை அழைப்பித்து: காரியம் என்ன? அதின் முகாந்தாரம் என்ன? என்று அறியும்படி, மொர்தெகாயினிடத்தில் விசாரிக்க அவனுக்குக் கட்டளையிட்டாள். அப்படியே ஆத்தாகு ராஜாவின அரமனை வாசலுக்கு முன்னான பட்டண வீதியிலிருக்கிற மொர்தெகாயினிடத்தில் புறப்பட்டுப்போனான். அப்பொழுது மொர்தெகாய் தனக்குச் சம்பவித்த எல்லாவற்றைப்பற்றியும், யூதரை அழிக்கும்படி ஆமான் ராஜாவின் கஜானாவுக்கு எண்ணிக்கொடுப்பேன் என்று சொன்ன பணத்தொகையைப் பற்றியும் அவனுக்கு அறிவித்ததும் அன்றி, யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலையும் அவனிடத்தில் கொடுத்து, அதை எஸ்தருக்குக் காண்பித்துத் தெரியப்படுத்தவும் அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச்சொன்னான்.

ஒன்றும் புரியாத எஸ்தர், தனது பணிவிடைக்கென்று இராஜாவினால் நியமிக்கப்பட்டிருந்த பிரதானிகளில் ஒருவனாகிய ஆத்தாகு என்பவனை அழைத்து, அவனை மொர்தெகாயினிடத்தில் அனுப்பி, மொர்தெகாய் இரட்டுடுத்தி, சாம்பலைத் தூவிக்கொண்டு புலம்பலோடு இருப்பதன் காரணம் யாது என விசாரித்து வரும்படி அவனை அனுப்பினாள். மொர்தெகாயும், ஆமானின் தீய முயற்சிகளாக இராஜாவின் கஜானாவிற்கு எண்ணிக்கொடுப்பேன்

என்று சொல்லியிருந்த பணத்தொகையைப்பற்றியும், யூதர்களை அழிப்பதற்காக இடப்பட்டிருந்த கட்டளைகள்பற்றியும், அந்தக் கட்டளையின் நகலைக்கூட அவனிடம் கொடுத்து எஸ்தரிடம் கொடுக்கும்படி கூறினான். அதுமட்டுமின்றி, எஸ்தர் அகத்தியமாய் இராஜாவினிடத்தில் போய் தன் ஜனங்களுக்காக விண்ணரப்பம்பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று அவன் சொல்லி அனுப்பினான். பேசவேண்டிய நேரம் வந்துவிட்டது. எஸ்தர் கட்டாயம் சென்று இராஜாவினிடத்தில் பேசவேண்டும் என்று பணிக்கப்படுகிறாள்.

வசனம் 4:9-11

ஆத்தாகு வந்து, மொர்தெகாயின் வார்த்தைகளை எஸ்தருக்கு அறிவித்தான். அப்பொழுது எஸ்தர் ஆத்தாகினிடத்தில் மொர்தெகாய்க்குச் சொல்லியனுப்பினது: யாராவது அழைப்பிக்கப்படாமல், உள்முற்றத்தில் ராஜாவினிடத்தில் பிரவேசித்தால், புருஷரானாலும் ஸ்திரீயானாலும் சரி, அவர்கள் பிழைக்கும்படிக்கு அவர்களுக்கு ராஜா பொற்செங்கோலை நீட்டினாலொழிய மற்றப்படி சாகவேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு, இது ராஜாவினுடைய சகல ஊழியக்காரருக்கும், ராஜாவினுடைய நாடுகளிலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரியும். நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைப்பிக்கப்படவில்லை என்று சொல்லச்சொன்னாள்.

அந்தச் செய்தியுடன் ஆத்தாகு எஸ்தரிடம் மீண்டான். மொர்தெகாயின் செய்தியை அறிந்த எஸ்தர் கூறப்போவது வேகமான ஒரே பதில். அப்படிச் செய்யமுடியாது என்பதே. இராஜா அழைப்பித்தாலொழிய ஒருவரும் அவன் முன்னிலையில் போகக்கூடாது என்பதை மொர்தெகாய்க்கு அறிவிக்கிறாள். இராஜஸ்திரீ கூட அந்த நியதியை மீறுதல்கூடாது. அப்படி யாராவது மீறிச் சென்றால் அவர்கள் நிச்சமாய்க் கொல்லப்படுவார்கள். அப்படி ஒருக்கால் சென்றவர்கள் பிழைக்கும்படி, இராஜா தனது பொற்செங்கோலை நீட்டினாலொழிய அவர்கள் சாகவே வேண்டும். இதற்கு முன்புதான் இராஜஸ்திரீயாகவிருந்த வஸ்தி, சகல அந்தஸ்துகளிலிருந்தும் நீக்கப்பட்டவிட்டாள். மற்றொரு இராஜஸ்திரீக்குக்கூட அவன் அவ்வாறே செய்யக்கூடும் அல்லது ஒருவேளை இவள் கொலை செய்யப்படவும் உத்தரவிடமுடியும். ஆகையால் எஸ்தர், இத்தகைய இழிநிலைகள் ஏதும் ஏற்படுவதை விரும்பவில்லை. ஆகையால் மொர்தெகாய் கூறியபடி, யூத ஜனங்களுக்காக மன்றாட அவள், இராஜாவினிடத்தில் செல்லுதல் என்பது முடியாததொன்றாகும் என்ற மறுப்புச் செய்தியோடு ஆத்தாகுவை மொர்தெகாயினிடத்தில் அனுப்பிவைத்தாள்.

வசனம் 4:12-14

எஸ்தரின் வார்த்தைகளை மொர்தெகாய்க்குத் தெரிவித்தார்கள். மொர்தெகாய் எஸ்தருக்குத் திரும்பச் சொல்லச்சொன்னது: நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவுகொள்ளாதே. நீ இந்தக் காலத்திலே

மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான்.

ஆத்தாகு எஸ்தரின் செய்திகளை மொர்தெகாயினிடம் சென்று அறிவித்தான். மொர்தெகாய் நிதானிக்கவில்லை. இராணியானாலும் சரி அந்த எஸ்தருக்கு அவன் கடுமையான கட்டளை ஒன்றினை கூறியனுப்பினான். நீ இராஜாவின் அரண்மனையில் இருக்கிறதினால், மற்ற யூதர்கள் யாரும் தப்பக்கூடாதிருக்க, நீ மட்டும் தப்புவாயென்று உன் மனதிலே நினைவுகொள்ளாதே. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்கு சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாயிரக்கும்படி உனக்கு இந்த இராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும் என்று மொர்தெகாய், அவளுக்குச் சொல்லியனுப்பினான்.

வசனம் 4:15-17

அப்பொழுது எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச்சொன்னது: நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள். நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம். இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன். நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள். அப்பொழுது மொர்தெகாய் புறப்பட்டுப்போய், எஸ்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தான்.

அந்த மொர்தெகாயின் செய்தி அவள் உள்ளத்தில் கிரியைசெய்ததெனலாம். எஸ்தர் ஒரு நல்ல மாறுத்தரம் சொல்லியனுப்புகிறாள். நீர் போய், சூசானிலிருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலும் இருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள். நானும் என் தாதியாரும் உபவாசம்பண்ணுவோம். இவ்விதமாக சட்டத்தைமீறி இராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன். நான் செத்தாலும் சாகிறேன் என்று மொர்தெகாய்க்கு அவள் செய்தி சொல்லியனுப்பினாள். என்னே அவளின் வியத்தகு மாறுத்தரம். தனது இன மக்களைக் காப்பாற்றவதற்காக, தனது உயிரைக்கூடத் தியாகம் செய்யத் துணிந்து நிற்கிறாள் அந்த இராஜஸ்திரீ. உண்மையில் என்னதான் நடக்குமோவென்பது எஸ்தருக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் அதை அவள் செய்யத் துணிந்துவிட்டாள். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகில் வந்தபோதோ அவர் சிலுவையில் அறையப்பட்டு பாடுபட்டு உயிர்விடவேண்டும் என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆனால் நமக்காகப் பாடுபட, ஜீவன் விடவே வந்தாரன்றோ. அவரே அன்பின் இரட்சகர்.

எஸ்தர், ஒரு யூத வம்சத்தைச் சேர்ந்தவள் என்பது ஒருவேளை யாருக்கும் தெரியாதுதான். ஆனால் மொர்தெகாய் சரியான உண்மைகளை அவளுக்குத் தெரியப்படுதினான்றோ? ஒருவேளை அந்த உயர் பதிவிக்கு இராஜஸ்திரீயாக அவள் உயர்த்தப்பட்டது ஒரு குறிப்பிட்ட காரணத்திற்குத்தானோ? அந்த யூத இனத்தாரைக் காப்பாற்றுவதற்காக்தானோ? இந்த உன்னத நிலை தேவனாகிய கர்த்தராலேயன்றி வேறு எவராலும் ஏற்பட்டிருக்கும் என அந்த யூதரில் யாரோனும் ஒருவன் நினைத்திருப்பானோ? எஸ்தர் உடனே செயல்ப்படுகிறாள். அரசியாக இருந்து ஒரு கட்டளையை மொர்தெகாய்க்கு அனுப்புகிறாள். மொர்தெகாய் பறப்பட்டுப்போய் எஸ்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தான். தேவனுடைய திட்டங்கள் ஒழுங்காக நடைபெறுவதைக் காணமுடிகிறதன்றோ?

## அதிகாரம் 5
## எஸ்தரின் மன்றாட்டு

வசனம் 5:1-2

மூன்றாள் நாளிலே எஸ்தர் ராஜவஸ்திரந் தரித்துக்கொண்டு, ராஜ அரமனையின் உள்முற்றத்தில், ராஜா கொலுவிருக்கும் ஸ்தானத்துக்கு எதிராக வந்து நின்றாள். ராஜா அரமனை வாசலுக்கு எதிரான கொலுமண்டபத்தில் ராஜாசனத்திலே வீற்றிருந்தான். ராஜா ராஜஸ்திரீயாகிய எஸ்தர் முற்றத்தில் நிற்கிறதைக் கண்டபோது, அவளுக்கு அவன் கண்களில் தயை கிடைத்ததினாலே, ராஜா தன் கையிலிருக்கிற பொற்செங்கோலை எஸ்தரிடத்திற்கு நீட்டினான். அப்பொழுது எஸ்தர் கிட்டவந்து செங்கோலின் நுனியைத் தொட்டாள்.

இராஜாத்தி (இராணியின்) கட்டளையை மொர்தெகாய் சூசான் நகரம் முழுவதிலுமிருந்த யூதர்களுக்குத் தெரிவிக்கிறான். எஸ்தர் உபவாசித்தபடியினால் அவளுடைய தாதிமார் அனைவரும், இராணிக்காக மூன்றுநாள் உபவாசித்திருந்தனர். எஸ்தர் செயல்ப்படவேண்டிய மூன்றாம் நாள் வந்தது. அவன் இராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, இராஜா அரண்மனையின் உள்முற்றத்தில், இராஜா கொலுவிருக்கும் ஸ்தானத்திற்கு எதிராக வந்து நின்றாள். அங்கே இராஜா என்னசெய்வாரோவென்று கவனித்தவளாக அமைதியாக நின்றிருந்தாள். அரச கொலுமண்டபத்திலே, சிம்மாசனத்தில் அகாஸ்வேரு இராஜா வீற்றிருந்தான். அவன் நிமிர்ந்து பார்க்கிறான். எதிரே எஸ்தர் இராஜாத்தியைக் கண்டு மகிழ்வு அடைகிறான். அவன் கண்களில் அவளுக்குத் தயை கிடைக்கிறது. அவன் தன் கையிலிருந்த பொற்செங்கோலை எஸ்தரிடத்திற்கு நீட்டினான். அதன் பொருள் என்ன? எஸ்தரின் வருகையை இராஜா ஆமோதிக்கிறான். எஸ்தர், அந்த நிலையில் எவ்வாறு உணர்ச்சி வசப்படுகிறாள் என்று வேதாகமம் நமக்குக் கூறவில்லை. ஆனால் தனது பிராணன், ஒருவேளை இராஜாவினால் அந்தச் செயலுக்காக

எடுக்கப்பட்டிருக்கக்கூடிய உயிர் தப்பியது என அறிந்த அவள் இராஜாவை நோக்கி சற்று முன்னே நடந்துசென்று, செங்கோலின் நுனியைத் தொடுகிறாள். நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தல் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய், இரவிலும் பகலிலும் இராஜாதி இராஜன் முன்னிலையில் சேரக்கூடியது நமக்குப் பெரும் மகிழ்ச்சியன்றோ (எபி.4:16).

வசனம்: 5:3

ராஜா அவளை நோக்கி: எஸ்தர் ராஜாத்தியே, உனக்கு என்னவேண்டும்? நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும், உனக்குக் கொடுக்கப்படும் என்றான்.

இராஜா பேசுகிறான்: எஸ்தர் இராஜாத்தியே, உனக்கு என்ன வேண்டும்? நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாதிகேட்டாலும் உனக்குக் கொடுக்கப்படும் என்று அவன் கூறுகிறான். அவ்வளவு பெரிய வாக்களிப்பு. இராஜஸ்திரீயாகிய எஸ்தர் இராஜவஸ்திரம் தரித்தவளாய் நின்றபோது அவளைப் பார்த்து அவன் பெருமகிழ்ச்சியடைந்திருந்தவனாய், அகாஸ்வேரு இராஜா அவளுக்குத் தனது இராஜ்யத்தில் பாதி வேண்டுமென்றாலும் கொடுக்க சித்தமாயிருந்தான் என்று நாம் பார்க்கிறோம். வேதத்தின் மற்றொரு பகுதியில் ஓர் இராஜா, ஒரு நடனமாடிய பெண்ணுக்கு இதேபோன்றதொரு வாக்களிப்பை வெளியிடுகிறான் என்று பார்க்கிறோம். ஆனால் அந்த மாது பணம், பொருள், பொன், நிலம் ஆகியவை யாதொன்றையும் கேட்காமல் யோவான்ஸ்நானகனின் தலையை மட்டுமே கேட்டாள். அந்த இராஜாவாகிய ஏரோது, மற்றவர்கள் தன்னைப்பற்றி தன் வாக்கை காப்பாற்றாமல் போனான் என்று கூறிவிடாதபடியிருக்க, அந்தக் குற்றமற்ற யோவான்ஸ்நானகனைக் கொன்று அவனுடைய தலையை வெட்டி ஒரு தட்டில் வைத்து அவளிடம் கொடுத்தான் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

வசனம் 5:4

அப்பொழுது எஸ்தர்: ராஜாவுக்குச் சித்தமானால், நான் தமக்குச் செய்வித்த விருந்துக்கு ராஜாவும் ஆமானும் வரவேண்டும் என்றாள்.

எஸ்தர் இங்கே உடனே எதையும் கேட்டு விடவில்லை. ஆனால் அவள் ஓர் அற்புத அழைப்பை இராஜாவிற்கு விடுக்கிறாள். இராஜாவும் ஆமானும் அவள் செய்வித்த விருந்துக்கு அன்றைய தினம் வரவேண்டுமாம். ஆமானுக்கு விருந்தா? இராஜாவுடனும் இராஜாத்தியுடனும். எஸ்தர் என்ன நினைத்துக்கொண்டு இதனையெல்லாம் செய்கிறாள். அவளுக்கு ஓர் அசைக்கமுடியாத நம்பிக்கை. நல்லதெல்லாம் நடக்கும் என்ற எண்ணத்தில்தானே அவள் அந்த விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தாள். எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன் என்று வேதம் கூறுகிறதன்றோ (யாக்.1:6).

வசனம் 5:5

அப்பொழுது ராஜா எஸ்தர் சொற்படி செய்ய, ஆமானைத் தீவிரித்து வரும்படி சொல்லி, எஸ்தர் செய்த விருந்துக்கு ராஜாவும் ஆமானும் வந்தார்கள்.

இராஜா மிகவும் மகிழ்ந்து போனான். இராஜாத்தி செய்த விருந்திற்கு தீவிரித்து வரும்படி ஆமானை அழைத்துவர, அவன் தனது பணியாட்களை அனுப்பினான். ஆமானிடம் அளவுகடந்த சந்தோஷத்தை நினைத்துப்பார்ப்போமாக. இராஜாத்தியாகிய எஸ்தர் அவனை விருந்திற்கு அழைத்திருக்கிறாளே.

வசனம் 5:6

விருந்திலே திராட்சரசம் பரிமாறப்படுகையில், ராஜா எஸ்தரைப் பார்த்து: உன் வேண்டுதல் என்ன? அது உனக்குக் கொடுக்கப்படும். நீ கேட்கிறது என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்றான்.

விருந்திலே அவர்கள் அமர்ந்திருந்தனர். இராஜா மறுபடியும் எஸ்தருக்கு வாக்குறுதி, வாழ்த்து வழங்குகிறான். நீ கேட்கிறது என்ன? நீ இராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்று கூறுகிறான். ஆனாலும் மறுபடியும் எஸ்தர் எதையும் கேட்கத் துணியவில்லை. ஆனால் மிகவும் பணிவுடன், ராஜாவின் கண்களில் எனக்குக் கிருபை கிடைத்தது..... ராஜாவுக்கு சித்தமானால்...... என்பன போன்ற மதிப்பிற்குரிய வார்த்தைகளால் பதிலளித்தாள். வேதத்தில் நாம் வாசிக்கும் தேவனுக்குப் பயந்திருங்கள் ராஜாவைக் கனம்பண்ணுங்கள் என்ற வார்த்தைகளை நினைவுகூருவோமாக. (1.பேது.2:17). அடுத்து எஸ்தர் மற்றுமொரு வியத்தகு அழைப்பை விடுவிக்கிறாள். இராஜாவும் அமானும் நான் இன்னும் தங்களுக்குச் செய்யப்போகும் விருந்திற்கு நாளை வரவேண்டும் என்பதே என் வேண்டுதலும் விண்ணப்பமுமாகும். நாளைக்கு இராஜாவின் சொற்படி செய்வேன். அதாவது இராஜாவின் சொற்படி எனது வேண்டுதலை அறிவிப்பேன் என்று எஸ்தர் கூறினாள். ஆமானுக்கு இன்னுமொரு விருந்தா? என்னதான் நடக்கப்போகிறதோ?

வசனம் 5:7-9

அதற்கு எஸ்தர் பிரதியுத்தரமாக: ராஜாவின் கண்களில் எனக்குக் கிருபைகிடைத்தது, என் வேண்டுதலைக் கட்டளையிடவும், என் விண்ணப்பத்தின்படி செய்யவும், ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், ராஜாவும் ஆமானும் நான் இன்னும் தங்களுக்குச் செய்யப்போகிற விருந்துக்கு வரவேண்டும் என்பதே என் வேண்டுதலும் என் விண்ணப்பமுமாயிருக்கிறது. நாளைக்கு ராஜாவின் சொற்படி செய்வேன் என்றாள். அன்றையதினமே ஆமான் சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமாய்ப் புறப்பட்டான். ஆனாலும் ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற மொர்தெகாய் தனக்கு முன் எழுந்திராமலும் அசையாமலும் இருக்கிறதை ஆமான் கண்டபோது, அவன் மொர்தெகாயின்மேல் உக்கிரம் நிறைந்தவனானான்.

ஆமான் இவைகளைப்பற்றியெல்லாம் யாது கூறினான் என்று வேதத்தில் யொதொன்றும் கூறப்படவில்லை. ஆனால் ஆமான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தான் என்று மட்டும் பார்க்கிறோம். அரண்மனையிலிருந்து மிகவும் மகிழ்சியோடே வெளியில் புறப்பட்டான். இராஜாத்தியாரே நேரில் அவனை அழைத்துள்ளாரே. அதைவிட வேறென்ன கேளரவம் ஒருவனுக்கு வேண்டும்? ஆனால் அவன் அரண்மனைவாசல் வழியே வெளியே செல்லுகையில், அங்கே மறுபடியும் மொர்தெகாய் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். ஆமான் கடந்து வரும்போது அங்கேயிருந்த அனைத்து ஊழியக்காரர்களும், பிரபுக்களும் அவனை வணங்கி நிற்க, அருகில் இருந்த மொர்தெகாயை உற்று நோக்குகிறான். அவனும் நிச்சயமாக இந்த முறை வணங்கியே தீருவான். நல்ல பாடம் புகட்டப்பட்டுவிட்டது என்றெல்லாம் அவன் நினைக்கிறான். ஆனால் அதுதான் நடக்கவில்லை. மொர்தெகாய் எழுந்துகூட நிற்கவில்லை. வேதத்தில் எழுந்திராமலும், அசையாமலும் இருந்தான் என்று கூறப்பட்டுள்ளது. அவன் மொர்தெகாயின்மேல் உக்கிரம் நிறைந்தவனானான். மொர்தெகாய் மரணத்தை எதிர்நோக்கியிருந்த நிலையியும்கூட ஆமான் போன்ற ஒரு மனிதனுக்கு தலை வணங்க மறுத்துவிட்டான்.

வசனம் 5:10-13

ஆகிலும் ஆமான் அதை அடக்கிக்கொண்டு, தன் வீட்டுக்கு வந்து, தன் சிநேகிதரையும் தன் மனைவியாகிய சிரேஷையும் அழைத்து, தன் ஐசுவரியத்தின் மகிமையையும், தன் பிள்ளைகளின் திரட்சியையும், ராஜா தன்னைப் பெரியவனாக்கி, தன்னைப் பிரபுக்கள்மேலும் ராஜாவின் ஊழியக்காரர்மேலும் உயர்த்தின எல்லாவற்றையும் ஆமான் அவர்களுக்கு விவரித்துச்சொன்னான். பின்னையும் ஆமான்: ராஜஸ்திரீயாகிய எஸ்தரும் தான் செய்த விருந்துக்கு ராஜாவுடனேகூட என்னைத்தவிர வேறொருவரையும் அழைக்கவில்லை. நாளைக்கும் ராஜாவுடனேகூட நான் விருந்துக்கு வரவழைக்கப்பட்டிருக்கிறேன். ஆனாலும் அந்த யூதனாகிய மொர்தெகாய் ராஜாவின் அரமனைவாசலில் உட்கார்ந்திருக்கிறதை நான் காணுமளவும் அவையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லையென்றான்.

ஆமானுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவன் அதை அடக்கிக்கொண்டே வீடு நோக்கி விரைந்தான். வீடு சேர்ந்ததும் தன் மனைவியாகிய சிரேஷை அழைத்தான். தனது நண்பர்களை அழைப்பித்தான். தனது ஐசுவரியத்தின் மகிமையைக் குறித்து அவர்களிடத்தில் பெருமையடித்துக்கொண்டான். மேலும் அவன் தன் பிள்ளைகளின் திரட்சியையும், இராஜா அவனை எல்லா பிரபுக்கள்மேலும் பெரியவனாக உயர்த்திவைத்துள்ள அனைத்தையும் கூறி பெருமைப்பட்டுக் கொண்டான். அதுமட்டுமின்றி, இராஜாத்தியான எஸ்தர் அவனுக்கு கொடுத்த அழைப்பினையும் குறித்துக் கூறுமிடத்து, அவள் செய்திருந்த விருந்திற்கு, அவனையும் இராஜாவையும் தவிர வேறு எவரையும் அழைக்காததையும் கூறியதுமட்டுமன்றி, நாளைக்கு வேறு ஒரு விருந்திற்கு இராஜாத்தியினால் அழைக்கப்பட்டுச்

செல்லவேண்டியிருப்பதனையும் கூறி மகிழ்ந்துகொண்டிருந்தான். கேட்டுக்கொண்டிருந்த நண்பர்கள் அவன் கூறியதை ரசித்தார்களோ, இல்லையோ அவன் யாவரும் வியக்கத்தக்கதாய் அவனுடைய மகிமைப் பிரதாபங்களைக் கூறி அவர்களின் பாராட்டுதல்களிலே மகிழ எண்ணிக்கொண்டிருந்தான். ஆனால் இவை அனைத்தையும் கெடுக்கும்படியாக ஓர் ஈனத்தனம் நடைபெறுவதையும் அவன் கூறாமல் இல்லை. அதுதான் மொர்தெகாய். அவனைப்பற்றிக் குறிப்பிட்ட ஆமான், ஆனால் அந்த யூதனாகிய மொர்தெகாய் இராஜாவின் அரண்மனை வாசலில் உட்கார்ந்திருக்கிறதை நான் காணுமளவும் இந்தப் பெருமையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லை என்று ஏக்கத்துடன் ஒரு பெருமூச்செறிந்தான். உண்மையாகவே அவனுக்கிருந்த பெருமை, செல்வம் யாவற்றையும் அவனால் இரசிக்கமுடியவில்லை. அவனுடைய பிள்ளைகள், செல்வம், செல்வாக்கு இவையெல்லாம் அந்த ஒரு மனிதன் அவனுக்குத் தலைவணங்காமல் இருக்கும்வரை ஒன்றுமில்லாததுபோலவே காணப்பட்டன. பாவம், அவன் தற்பெருமையால் புடைத்துப்போயிருந்தான்.

வசனம் 5:14

அப்பொழுது அவன் மனைவியாகிய சிரேஷும் அவனுடைய சிநேகிதர் எல்லாரும் அவனைப் பார்த்து: ஐம்பதுமுழ உயரமான ஒரு தூக்குமரம் செய்யப்படவேண்டும். அதிலே மொர்தெகாயை தூக்கிப்போடும்படி நாளையதினம் நீர் ராஜாவுக்குச் சொல்லவேண்டும். பின்பு சந்தோஷமாய் ராஜாவுடனேகூட விருந்துக்குப் போகலாம் என்றார்கள். இந்தக் காரியம் ஆமானுக்கு நன்றாய்க் கண்டதினால் தூக்குமரத்தைச் செய்வித்தான்.

அவனுடைய அருமை மனைவி சிரேஷ், அன்பு நண்பர்களும் அவனுக்காகச் சிந்தனைசெய்து ஓரற்புதமான ஆலோசனையை முன்வைத்தார்கள். ஐயா, ஆமான் அவர்களே, அழகான ஒரு தூக்குமரத்தைச் செய்வியும். உறுதியான ஐம்பது முழ உயரமானதுமாக, யாவரும் தலைநிமிர்ந்து பார்க்கக்கூடியதுமாக அது இருக்கவேண்டும். நாளைக்கு, நீர் இராஜாவினிடம் தனித்துப்பேசி, மொர்தெகாயை அதிலே தூக்கிப்போட வகைசெய்யும். இராஜாவினாலே உமது ஆலோசனையின்படியே எல்லா யூதர்களையும் கொலைசெய்விக்க கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதே. யூதர்கள் அனைவரும் கொலைசெய்யப்படவேண்டுமென்று குறிக்கப்பட்டுள்ள நாள், நேரம் வருமுன்பே, அந்த யூதர்களில் மொர்தெகாய் போன்ற ஒருவன், சற்று முன்கூட்டியே தூக்கிலிடப்படுவது இராஜாவிற்கு மிகக் கடினமான சட்டப்பிரச்சனையோ, கடினமானதோ அல்லவே. அதற்குப்பின்பு நீர் மகிழ்ச்சியுடன் இராஜாத்தியின் விருந்திற்குள் நுழையலாமே..... என்று ஆமானை உசுப்பினர். ஆமான் ஒரு கொடியோன். அவனுடைய நண்பர்கள் அவனிலும் கொடியவர் என்பதை நாம் காணமுடிகிறதன்றோ? ஆமான் ஒருகணமே யோசித்தான். இது மிகவும் இனிமையான ஆலோசனையாக அவனுக்குப்பட்டது. அடுத்தகணமே, அந்தத் தூக்குமரம் உயரமானதாக, உறுதியானதாக யாவரும் காணும்படியாக, மொர்தெகாயைத் தூக்கிப் போடும்படியாக செய்வித்து நிறுத்தினான். இராஜா

தனது திட்டத்திற்குச் சிறிதளவேனும் மாற்றமோ, அல்லது மறுப்போ சொல்லாமல் அதை நிறைவேற்றச் செய்வான் என்று அவன் நம்பினான். மொர்தெகாயை அதிலே தூக்கிப்போட்டு, அனைவரும் அதைக்கண்டு, ஆமானை எதிர்ப்பவர், அவமதிப்பவர், எவராக இருப்பினும் அவர்களுக்கு யாது நேரிடும் என்பதைப் புரிந்துகொள்ளச்செய்ய அவன் தீர்மானித்தான்.

கொடுமையின் கோரமான கரங்கள் மொர்தெகாயை நெருங்கிக்கொண்டேயிருந்தன. அதையறியாத அவன் அந்தோ, இன்னும் ஒரே ஒருநாள் மட்டுடே உயிருடன் வாழமுடியும். அவனுக்காக உதவிக்கரம் நீட்டுவோர் அன்புக் கரம் நீட்டுவோர் நீதியின் கரம் நீட்டுவோர் யாருமில்லையோ? ஏன் இல்லை? தேவாதி தேவன் இருக்கிறார். இந்தக் கொடுமைகள் எத்தனை துரிதமாக முளைத்தனவோ அத்தனை துரிதமாகவே முற்றிலும் மாறிப்போக அவர் கிருபை செய்தார்.

## அதிகாரம் 6

## மொர்தெகாய் பெற்ற மாட்சிமை

வசனம் 6:1-3

அந்த ராத்திரியிலே ராஜாவுக்கு நித்திரை வராதபடியினால், காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புஸ்தகத்தைக் கொண்டுவரச்சொன்னான், அது ராஜசமுகத்தில் வாசிக்கப்பட்டது. அப்பொழுது வாசற் காவலாளரில் ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானாவும் தேரேசும், ராஜாவாகிய அகாஸ்வேருவின்மேல் கைபோடப்பார்த்த செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருக்கிறது வாசிக்கப்பட்டது. அப்பொழுது ராஜா: இதற்காக மொர்தெகாய்க்குக் கனமும் மேன்மையும் செய்யப்பட்டதா என்று கேட்டான். அதற்கு ராஜாவைச் சேவிக்கிற ஊழியக்காரர்: அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள்.

அன்று இராத்திரியிலே இராஜாவிற்கு நித்திரை வரவில்லை. இந்த நிலை இராஜாக்களுக்கும் ஏற்படுகிறதாதோ? ஆம், இராஜாக்களுக்குத் தூக்கம் வராத நிலையைப்பற்றி நாம் வேதத்தில் மூன்று இடங்களில் காணமுடிகிறது. ஒவ்வொரு நிலையிலும், ஒரு தேவனுடைய மனிதன் ஆசீர்வதிக்கப்படுவதைக் காணமுடிகிறது. ஆதியாகமம்41:4-8ல் எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் சொப்பனங்கள் கண்டு தூக்கம் கலைந்து எழுந்து கலக்கம் அடைவதைக் காணமுடிகிறது. காலையில் இராஜா மந்திரவாதிகளையும் சகல சாஸ்திரிகளையும் அழைப்பித்துத் தன் சொப்பனத்தின் அர்த்தத்தைக் கூறும்படி கேட்க, அவர்களால் கூடாமற்போனதினால், அவர்கள் எபிரெயனாகிய யோசேப்பை அழைப்பிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு, சிறையிலிருந்து அவனை அழைத்துவந்து, இராஜாவின் சொப்பனத்தை விடுவிக்கக் கோருகின்றனர். அதன் அர்த்தத்தை அவன் தெளிவுறக்கூற இராஜா அவனை

அரண்மனையின் மிக உன்னத பதிவியில் அமர்த்தும் வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கிறது. அது யோசேப்பிற்கு கர்த்தரால் கிடைத்த ஆசீர்வாதம்.

தானியேலின் புத்தகம் 2:1ல் நேபுகாத்நேச்சார் இராஜா சொப்பனம் கண்டு நித்திரை கலைந்து கலக்கம் அடைந்தபோது ஒருவராலும் அந்தச் சொப்பனத்தின் அர்த்தத்தை விடுவிக்கக்கூடாதிருந்தது. அப்போதும் ஓர் எபிரெய அடிமையின் பெயர் குறிப்பிடப்பட்டு, தானியேல் கொண்டுவரப்பட்டு சொப்பனத்தின் அர்த்தத்தை விடுவித்து, அதன் விளைவாக தானிலேும் அவனுடனிருந்த மூன்று நண்பர்களும் மிக உயர்ந்த ஸ்தானத்தில் அமர்த்தப்பட்டதைக் காண்கிறோம். அதுவும் அவர்கள் பெற்ற தேவனுடைய ஆசீர்வாதமே. மற்றுமொருமுறை தரியு இராஜாவின் நாட்களில் தானியேல் சிங்கங்களின் கெபியிலே அடைக்கப்பட்டபோது, மிகத் துயரமடைந்த இராஜா இரவெல்லாம் நித்திரையில்லாமலிருந்து அதிகாலையிலே சிங்கங்களின் கெபியருகே சென்று தானியேலைக் கூப்பிட்டுப்பார்த்து உயிரோடிருக்கக்கண்ட வரலாற்றைத் தானியேல் புத்தகம் 6:18-20ல் நாம் வாசிக்க முடிகிறது. அதுமுதல் தரியுவின் ஆட்சியிலும் கோரேசின் ஆட்சியிலும் தானியேல் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்த வரலாற்றை நாம் காண்கிறோம்.

அதுபோல, இப்போதும் அகாஸ்வேரு தூக்கம் கலைந்து இருக்கும் நிலை ஏற்படும்போது அது தேவனுடைய மனிதன் ஒருவனை எவ்வாறு பாதிக்குமோ என அறிய நாம் அதிக ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம். இரவு, அவனுக்கு மிகவும் தொல்லை நிறைந்ததாகக் காணப்பட்டதால் தூக்கம் வராமல் அவன் அவதிப்பட்டதால் காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற புத்தகத்தைக் கொண்டுவந்து வாசிக்கச்செய்வது இராஜாக்களின் அந்நாளைய வழக்கமாக இருந்தது. அவனுக்கு நித்திரை வரவில்லை. ஏதாகிலும் வேலையாவது செய்யலாமோவென்று அவன் நினைத்தான். வாசிக்கும்படி கேட்டான். வர்த்தமானங்கள் வாசிக்கப்பட்டது. அதிலே மொர்தெகாய் இராஜாவின் உயிரைச் சில துரோகிகளின் சூழ்ச்சியிலிருந்து காப்பாற்றிய வரலாறு வாசிக்கப்பட்டது. இரண்டு துரோகிகள் இராஜாவைக் கொல்லச் சதிசெய்ததை அறிந்த மொர்தெகாய் அதை இராஜாவுக்கு அறிவித்ததினால் இராஜா உயிர்தப்ப முடிந்தது. அந்த இரண்டு துரோகிகளும் தூக்கிலிடப்பட்டு ஒழிக்கப்பட்டு விட்டனர். இராஜா இதைக் கவனித்துக் கேட்டான்.

இதற்காக மொர்தெகாய்க்குக் கனமும் மேன்மையும் செய்யப்பட்டதா? என்று மிகவும் அனுசரணையுடன் கேட்டான் இராஜா. அப்படி அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள் அந்தப் பிணிவிடைக்காரர்கள். இது மிகவும் விசனப்படவேண்டிய வார்த்தைகள். ஒரு மனிதன் இராஜாவின் உயிரைக் காப்பாற்றியுள்ளான். ஆனால் முற்றிலுமாக அவனுக்கு எந்தவித சலுகைகளும், நன்றி பாராட்டுதலும் செய்யப்படவில்லை. மொர்தெகாய்க்கு நடந்ததுபோலே நமது ஆண்டவராகிய இயேசுவிற்கும் நடந்ததை நாம் அறிந்திருக்கிறோம். அவர் உலகத்திலே மனுஷகுமாரனாக அவதரித்தாா. வியாதியஸ்தர்களைக் குணமாக்கினார். ஏழைகளுக்குப் பல உதவிகள் செய்தார். மரித்தோர் சிலரை உயிருடன் எழுப்பினார். நமக்காகப் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு

மரித்தார். ஆனால் அவருக்கு நாம் கைமாறாய் ஏதும் செய்யவில்லை. ஏரேமியா தனது புலம்பலிலே சிலுவையில் தொங்கிய ஆண்டவரைக் காட்டி வழியில் நடந்துபோகிற சகல ஜனங்களே இதைக் குறித்து உங்களுக்குக் கவலையில்லையா?.. என்னைச் சஞ்சலப்படுத்தினால் எனக்குண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப் பாருங்கள் என்று தீர்க்கதரினமாய்ப் புலம்புகிறான் (புல.1:12). ஆம். உண்மைதான். அவருக்கு நாம் ஏதும் செய்யாமல் அவரை சஞ்சலப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். விரைவிலே, தேவன் கடாட்சித்தருளும்போது, அந்த நாளிலே வானத்திலும் பூமியிலுமிருந்து சகல மகிமையும் அவருக்கு உண்டாகும்.

வசனம் 6:4-6

ஆமான் தான் செய்த தூக்குமரத்திலே மொர்தெகாயைத் தூக்கிப்போடவேண்டுமென்று, ராஜாவினிடத்தில் பேசும்படி ராஜ அரமனையின் வெளிமுற்றத்திலே வந்திருந்தான். அப்பொழுது ராஜா: முற்றத்திலிருக்கிறது யார் என்று கேட்டான். ராஜாவின் ஊழியக்காரர் அவனை நோக்கி: இதோ, ஆமான் முற்றத்திலே நிற்கிறான் என்றார்கள். ராஜா: அவன் உள்ளே வரட்டும் என்றான். ஆமான் உள்ளே வந்தபோது, ராஜா அவனை நோக்கி: ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்னசெய்யப்படவேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆமான், என்னையன்றி யாரை ராஜா கனம்பண்ண விரும்புவார் என்று தன் மனதிலே நினைத்து,

அகாஸ்வேரு மொர்தெகாய்க்கு முறைப்படி செய்யவேண்டியதைக் காட்டாயம் செய்யவேண்டும் என்று எண்ணினான். அது என்ன? ஒருவேளை அவனுடைய பிரதானிகள் அதை அறிந்திருப்பர் என்று எண்ணினான் போலும். இரவு கழிந்தது, காலை மலர்ந்தது. இராஜா நன்றாக விழித்துக்கொண்டு முற்றத்தில் இருக்கிறது யார்? என்று கேட்டான். முற்றத்தில் ஆமான் வந்து நின்றுகொண்டிருந்தான். மொர்தெகாயை, புதிதாகச் செய்து நிறுத்தியிருந்த தூக்குமரத்திலே தூக்கிப்போட, இராஜாவினிடத்தில் பேசி முடிவெடுக்கவே அவன் அங்கு வந்து இராஜாவை சந்திக்க காத்து நின்றான். ஆமான்தான் வந்து நிற்கிறார் இது இராஜாவின் கேள்விக்கு அவனுடைய ஊழியக்காரர் உவந்தளித்த பதில். அவன் உள்ளே வரட்டும்., இது இராஜாவின் சித்தம். உள்ளே வந்த ஆமான் தனது எண்ணத்தை, நோக்கத்தை, கோரிக்கையை, வேண்டுதலை இராஜாவினிடம் கேட்குமுன்பே, இராஜா ஆமானை நோக்கி, இராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்படவேண்டும் என்று கேட்டான். பெயரொன்றும் குறிப்பிடப்படாமலிருந்தது இராஜாவின் கேள்வி. ஆமானுக்கு ஒரே மகிழ்ச்சி. என்னைத்தானே - அவன் எண்ணுகிறான். என்னைத் தவிர வேறு யாரை இராஜா கனம்பண்ண விரும்புகிறார்? அவனுடைய வீண் பெருமை அவனைச் சிந்திக்கவைக்கவில்லை. ஒருவேளை வேறொருவனைக் கூட இராஜா கனம்பண்ண விரும்பலாமேயென்று அவன் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. இது நேற்று அவனுக்குக் கிடைத்த புகழ்ச்சியைவிட மிக அதிகமானதென அவனுக்குப்பட்டது. மிக உன்னதமான ஒரு நேரம் வந்துதித்ததாக அவன்

எண்ணுகிறான். அவன் விரும்பும் எந்த ஒரு புகழ்ச்சியையும் அவன் இப்போது இராஜாவிடமிருந்து பெறமுடியும். பதில் சொல்லுமுன் சிந்திக்க சில நிமிடங்களே அவனுக்கு இருந்தன.

வசனம் 6:7-9

ராஜாவை நோக்கி: ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால், ராஜா உடுத்திக்கொள்ளுகிற ராஜவஸ்திரமும், ராஜா ஏறுகிற குதிரையும், அவர் சிரசிலே தரிப்பிக்கப்படும் ராஜமுடியும் கொண்டுவரப்படவேண்டும். அந்த வஸ்திரமும் குதிரையும் ராஜாவுடைய பிரதான பிரபுக்களில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப்படவேண்டும். ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனை அலங்கரித்தபின், அவனைக் குதிரையின்மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறப்படவேண்டும் என்றான்.

ஆமான் இராஜாவிற்குப் பதில் கூறத் தயாரானான். பதில் கூறுகிறான். இராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால், இராஜா உடுத்திக்கொள்ளுகிற இராஜவஸ்திரமும், இராஜா ஏறுகிற குதிரையும், அவர் சிரசில் தரிப்பிக்கப்படும் இராஜமுடியும் கொண்டுவரப்படவேண்டும். அவனை அந்த ஆடையால் அலங்கரித்து, அந்தக் குதிரையின்மேலேற்றி நகர வீதிகளில் உலாவ வைக்கவேண்டும். அப்போது பிரதானிகளில் ஒருவன் இராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறியபடி செல்லவேண்டும் என்று ஆமான் கூறினான்.

வசனம் 6:10-11

அப்பொழுது ராஜா ஆமானை நோக்கி: சீக்கிரமாய் நீ சொன்னபடி வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டுபோய், ராஜ அரமனையின் வாசலிலே உட்கார்ந்திருக்கிற யூதனாகிய மொர்தெகாய்க்கு அந்தப்பிரகாரம் செய். நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார் என்றான். அப்படியே ஆமான் வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டுபோய், மொர்தெகாயை அலங்கரித்து, அவனைக் குதிரையின்மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறினான்.

ஆமானுக்கு நிலைகொள்ளவில்லை. இராஜவஸ்திரம் தரித்தவனாகவும், இராஜமுடியை அணிந்தவனாகவும் குதிரையின்மீதமர்ந்து உலாவத் துடித்தான். அவ்வாறு ஆமான் வருவதாகவும், மக்கள் சூழநின்று அவனைக் காண்பதாகவுமிருந்தால் அது அவனுக்கு ஒரு பொன்னாளாகுமன்றோ? அவனும் அவ்வாறே எண்ணிக்கொண்டிருந்தபோது இராஜாவின் குரல் ஒலித்தது. மிகவும் நன்று ஆமான். சீக்கிரமாய் நீ சொன்னபடி வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டுபோய் இராஜஅரண்மனையின் வாசலில் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய

மொர்தெகாய்க்கு அந்தப்பிரகாரம் செய். நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார்... என்று கட்டளையிட்டான் அந்த இராஜா. ஆமானுக்கு ஒரே அதிர்ச்சி. அவன் காதுகளை அவனால் நம்பக்கூட முடியவில்லை. யூதனாகிய மொர்தெகாய் தான் இராஜாவால் கனம்பண்ணப்படப்போகிறவன். ஆனால் மகா பெரியவனாகிய ஆமான்? ஆமான்தான் அதை மொர்தெகாய்க்கு நடத்திவைக்கவேண்டும். அது நடக்குமா, நடக்காதா? நடந்தே தீரவேண்டும். ஆமானின் முகம் எவ்வளவு விகாரமாக மாறிவிட்டிருக்கக்கூடும். மொர்தெகாயைத் தூக்குமரத்தில் தூக்கிப்போடுவது குறித்துப்பேசவே அவன் இராஜாவினிடத்திற்கு வந்தான். அதே மொர்தெகாய்க்கு இராஜவஸ்திரம் தரித்து, இராஜமகுடம் சூட்டி குதிரைமீதேற்றி நகரவீதியில் உலாவவிட்டு அந்தப் பவனிக்கு முன்னால் நடந்தவனாக ஆமான். இது இராஜாவினால் அளிக்கப்பட்ட கனம் என்று அவன் கூறிச்செல்லவேண்டும். ஆமான் ஏதும் பேசியதாக வேதம் கூறவில்லை. ஆமான் பேசக்கூடாதவனாகிவிட்டான் போலும். இராஜா சொன்னபடியே ஆமான் செய்தான் என்று வேதம் கூறுகிறது. பாவம்! ஆமானுக்குத்தான் எத்தகைய கெட்டநாள் அன்று.

வசனம் 6:12

பின்பு மொர்தெகாய் ராஜாவின் அரமனைவாசலுக்குத் திரும்பிவந்தான். ஆமோனோவென்றால் சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக்கொண்டு தன் வீட்டுக்குத் தீவிரித்துப்போனான்.

மொர்தெகாயும்கூட ஆமானைப்போலவே திகைப்பிலாழ்ந்தவனானான். மொர்தெகாயை அவனுடைய இனத்தார்களான யூதர்களனைவரையும்கூட கொல்வதற்குக் கட்டளைகள் பிறப்பித்தவனாகிய அதே ஆமான், அதே மொர்தெகாயைச் சகல இராஜமரியாதைகளுடனும் வீதியில் உலாவ அழைத்து வருகிறான். சூசான் நகர மக்களனைவருமே வியப்பில் ஆழ்ந்துபோயிருப்பாரன்றோ? என்னவெல்லாமோ நடந்து முடிந்துவிட்டன. இது முடிவுபெற்றபின் மொர்தெகாய் மறபடியும் இராஜ அரண்மனை வாசலண்டைக்கே திரும்பிவந்துவிட்டான் என்று வேதம் கூறுகிறது. ஆமான் செய்ததுபோல் அவன் தன் நண்பர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு பெருமையடித்துக்கொள்ளவில்லை.

வசனம் 6:13-14

ஆமான் தனக்கு நேரிட்ட எல்லாவற்றையும் தன் மனைவியாகிய சிரேஷுக்கும் தன் சிநேகிதர் எல்லாருக்கும் அறிவித்தபோது, அவனுடைய ஆலோசனைக்காரரும் அவன் மனைவியாகிய சிரேஷும் அவனைப் பார்த்து: மொர்தெகாய்க்கு முன்பாக நீர் தாழ்ந்துபோகத் தொடங்கினீர். அவன் யூதகுலமானால், நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாகத் தாழ்ந்துபோவது நிச்சயம் என்றார்கள். அவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே, ராஜாவின் பிரதானிகள் வந்து, எஸ்தர் செய்த விருந்துக்கு வர ஆமானைத் துரிதப்படுத்தினார்கள்.

ஆமானுக்கோ அனைத்து நடைமுறைகளும் மாறிப்போய்விட்டிருந்தது. அவன் சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக்கொண்டு தன் வீட்டிற்குத் தீவிரித்துப் போனான். விட்டிலே தன் மனைவியாகிய சிரேசையும், தனது நண்பர்களையும் அழைத்து தனக்கு நேரிட்டு எல்லாவற்றையும் அவர்களுக்கு அறிவித்தான். அதற்கு முன்தினம் அவன் அவர்களிடம் கூறிய கதையென்ன? இன்று கூறுவது என்ன? எத்தனை பெரிய வித்தியாசம். அவனுடைய மனைவியும் நண்பர்களும் அவனுக்கு நல்ல செய்தி கூறமுடியவில்லை. ஆமானுக்குக் கேடுகள் சூழ்ந்தவரத் தொடங்கிவிட்டதை அவர்களால் நன்கு உணரமுடிந்தது. மொர்தெகாய் யூத குலமானால் நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாகத் தாழ்ந்துபோவது நிச்சயம் என்று அவர்கள் கூறினார்கள். மேலும் அவர்கள் நீர் தாழ்ந்துபோய்க் கொண்டிருக்கிறதைச் சுட்டிக்காட்டினார்கள். யோபு, தனது நண்பர்களைக் கூறியதுபோல் (யோபு 6:2) ஆமானும் தனது நண்பர்களை அலட்டுண்டாக்குகிற தேற்றரவாளர்கள் என்று கூறியிருக்கலாம். ஆனால் இவர்கள் கூறியவை யாவும் முற்றும் உண்மையே. அவர்கள் இப்படி பேசிக்கொண்டிருக்கும்போது இராஜாவின் உழியக்காரார்கள் அங்கு வந்து சேர்ந்தனர். இராஜாத்தியாகிய எஸ்தரின் விருந்திற்கு ஆமோனை அழைத்துப்போகவே அவர்கள் இங்கு வந்திருந்தனர்.

## அதிகாரம் 7
# எஸ்தரின் வேண்டுகோள்

வசனம் 7:1-2

ராஜாத்தியாகிய எஸ்தருடனே விருந்துண்ண, ராஜாவும் ஆமானும் வந்தபோது, இரண்டாம் நாள் விருந்தில் திராட்சரசம் பரிமாறப்படும்போது, ராஜா எஸ்தரை நோக்கி: எஸ்தர் ராஜாத்தியே, உன் வேண்டுதல் என்ன? அது உனக்குக் கொடுக்கப்படும். நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்றான்.

மொர்தெகாயைப்பற்றிய நடவடிக்கைகளில் குழம்பிப்போயிருந்த ஆமான், இன்னும் மகிழ்ச்சிப் பெருமையில் திளைத்துக்கொண்டுதான் இருந்தான். இராஜாவுடனும் இராஜாத்திடனும் விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தவன் அவன் ஒருவன் மட்டுமேயல்லவா? அது அவனைச் சீமானாக்கிக் காட்டவில்லையா? ஆகையால் அவன் இராஜாத்தியின் விருந்து மண்டபத்திற்குள், அந்த அரச விருந்தில் கலந்துகொள்ள, மெள்ள நுழைந்து வந்து கொண்டிருந்தான். பணியாளர்கள் சூழ அரச தம்பதிகளுடன் அமர்ந்து விருந்துண்பது அவனுக்கு மிக்க மகிழ்ச்சிதானே. அவன் வீட்டிற்குத் திரும்பிவந்தவுடன் அவன் அதைப்பற்றி வீட்டில் உள்ளவர்களிடம் கூறிப் பெருமையடித்துக்கொள்ளமுடியுமன்றோ?

விருந்து பரிமாறல் தொடங்கியது. இராஜா எஸ்தரை வாழ்த்தி, இராஜாத்தியே உன் வேண்டுதல் என்ன என்று தனது பழைய வாழ்த்துதலை மறுபடியும் ஆரம்பித்தான். நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ இராஜ்யத்தில் பாதி மட்டும்

கேட்டாலும் அது உனக்குக் கிடைக்கும் என்று மறுபடியும் அவன் கூறுகிறான். இராஜாத்தியாகிய எஸ்தர் நடத்தும் விருந்துகளைப்பற்றி அவனுக்கு ஒரே விந்தையாகவே இருந்ததெனலாம்.

வசனம் 7:3-4

அப்பொழுது ராஜாத்தியாகிய எஸ்தர் பிரதியுத்தரமாக: ராஜாவே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்தது, ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக. எங்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம். அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவும் விற்கப்பட்டுப்போனாலும் நான் மவுனமாயிருப்பேன். இப்பொழுதோ ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்தச் சத்துரு உத்தரவாதம்பண்ண முடியாது என்றாள்.

இப்போது பதில் பேசவேண்டியவள் எஸ்தரே. அவளுடைய நேரமும் வந்துவிட்டதென்றே நாம் கூறலாம். அவள் கேட்கவேண்டியதை இன்னும் அவள் தாமதப்படுத்தக்கூடாதன்றோ? அவள் தனது பதிலை ஆரம்பிக்கிறாள். எல்லா மரியாதைகளுடனும் அவள் பேசத் துவங்கி, இராஜாவே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்தது, இராஜாவிற்குச் சித்தமாயிருந்தால்......, மிகவும் பண்புள்ள, அடக்கமுள்ள, ஒழுங்குள்ள பதிலாக அவள் ஆரம்பிக்கிறாள். அந்த வேண்டுதல் கிடைக்க, இராஜா செய்வதாக இருந்தால், அது அவனுடைய கருணை நெஞ்சத்தினால் மட்டுமே என்று பொருள்படும்படி அவள் பேசுகிறாள். அடுத்து அவள் கூறிய வாக்கியம் மிகவும் வியப்பளிப்பதாக உள்ளது. என் வேண்டுதலுக்கு என் ஜீவனும் என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக..... என்று அவள் கூறுவது எதனைப் பற்றியது? இதனைப் புரிந்து கொண்டிருந்தால் ஆமான் பயத்தால் உறைந்துபோயிருப்பான். பாவம்! எஸ்தர் தொடர்ந்து, எங்களை அழித்துக்கொன்று நிர்மூலமாக்கும்படி, நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம். அடிமைகளாக விற்கப்பட்டுப்போயிருந்தால்கூட நான் மவுனமாயிருந்திருப்பேன். இப்பொழுதோ இராஜாவுக்கு உண்டாக்கும் நஷ்டத்திற்கு அந்தச் சத்துரு உத்தரவாதம் பண்ணமுடியாது..... என்று கூறிய எஸ்தர், அந்த யூதர்கள் நல்ல குடிமக்கள் என்றும், நாட்டிற்கு மிகவும் உதவக்கூடியவர்கள் என்றும் இராஜாவுக்கு உணர்தி அவள் பதில் கூறுகிறாள். அதுமட்டுமன்றி, இப்போது நானும் எனது ஜனங்களும் அழித்துக்கொன்று நிர்மூலமாக்கும்படிக்கு விற்கப்பட்டோம் - என்று அவள் விளக்கி இராஜாவிடம் கூறுகிறாள்.

வசனம். 7:5-8

அப்பொழுது ராஜாவாகிய அகாஸ்வேரு மறுமொழியாக, ராஜாத்தியாகிய எஸ்தரை நோக்கி: இப்படிச் செய்யத் துணிகரங்கொண்டவன் யார்? அவன் எங்கே என்றான். அதற்கு எஸ்தர்: சத்துருவும் பகைஞனுமாகிய அந்த மனிதன்

இந்த துஷ்ட ஆமான்தான் என்றாள். அப்பொழுது ராஜாவுக்கும் ராஜாத்திக்கும் முன்பாக ஆமான் திகிலடைந்தான்.

ராஜா உக்கிரத்தோடே திராட்சரசப்பந்தியை விட்டெழுந்து, அரமனைத் தோட்டத்திற்குப் போனான். ராஜாவினால் தனக்குப் பொல்லாப்பு நிர்ணயிக்கப்பட்டதென்று ஆமான் கண்டு, ராஜாத்தியாகிய எஸ்தரிடத்தில் தன் பிராணனுக்காக விண்ணப்பம்பண்ண எழுந்துநின்றான்.

ராஜா அரமனைத் தோட்டத்திலிருந்து திராட்சரசம் பரிமாறப்பட்ட இடத்துக்குத் திரும்பிவருகையில், எஸ்தர் உட்கார்ந்திருக்கிற மெத்தையின்மேல் ஆமான் விழுந்துகிடந்தான். அப்பொழுது ராஜா: நான் அரமனையிலிருக்கும்போதே என் கண்முன்னே இவன் ராஜாத்தியைப் பலவந்தம் செய்யவேண்டுமென்றிருக்கிறானோ என்றான். இந்த வார்த்தை ராஜாவின் வாயிலிருந்து பிறந்தவுடனே ஆமானின் முகத்தை மூடிப்போட்டார்கள்.

இப்போது இராஜா வியப்பில் ஆழ்ந்துபோகிறான். அவன் குழப்பமடைகிறான். எஸ்தர் எதைப்பற்றிக் கூறிக்கொண்டிருக்கிறாள். அவன் கேள்வி கேட்கிறான். இப்படிச் செய்யத் துணிகரங்கொண்டவன் யார்? அவன் எங்கே? உடனே எஸ்தர் ஆமானிடம் திரும்பி, இராஜாவிடம், சத்துருவும் பகைஞனுமாகிய அந்த மனிதன் இந்த துஷ்ட ஆமான்தான், என்று எஸ்தர் கூறினாள். அத்தனை விசாரணைக்கூட்டங்களும் இப்போது ஆமானுக்கு எதிராக திரும்பிவிட்டன. ஆமான் அழிந்துபோனான். இராஜாவிற்கும் இராஜாத்திக்கும் முன்பாக ஆமான் திகிலடைந்தான் என்று வேதம் கூறுகிறது. இதிலே வியப்பொன்றுமில்லை. உண்மைச் செய்தி வெளிவந்தது. எஸ்தர் இராணி ஒரு யூதஸ்திரி. ஆமான் ஓர் இனத்தையே, யூத இனத்தையே எஸ்தர் இராணியின் இனமாகிய அந்த யூத இனத்தையே , அழிக்க திட்டம் தீட்டினான். ஆமானுக்கு இதைவிட மோசமான ஒரு நிலை ஏற்படப்போவதில்லை. அவன் நடுக்கங்கொண்டான்.

இராஜா உக்கிரக்கோபம் கொண்டான். திராட்சரச பந்தியைவிட்டெழுந்து, அரண்னைத் தோட்டத்திற்குள் போனான். ஆமோன் இராஜ நம்பிக்கையைப்பெற இடங்கொடுத்தவன் இந்த அகாஸ்வேரு இராஜாதானே. அவனுக்கு இராஜ சமஸ்தானத்தில் மிக உயர்ந்த அந்தஸ்தைக் கொடுத்தவன் யார்? தவறான ஒருவன் இராஜாவின் அதிகாரப் பொறுப்பிலேற்பட்டது எங்கனம்? இப்படித்தான் நாம் நமது வாழ்க்கையின் நிலைகளில் தேவனுக்குக் கிடைக்கவேண்டிய இடத்தில் சாத்தானை அமர்த்திவிடுகிறோம் அன்றோ? இராஜாவின் உக்கிரகோபம் இப்போது ஆமானை நோக்கிப் பாயத் தலைப்பட்டது. அன்று அவன் இராணியின் உயிருக்கு உலைவைத்து இராஜாவை முட்டாளாக்கப்பார்த்தானன்றோ?

ஆமானுக்கு பிராணாபத்து நெருங்கிவிட்டதை நன்கு உணர்ந்தவுடன் இராஜாத்தியாகிய எஸ்தரிடம் தனது உயிருக்காக மன்றாட முயற்சி செய்கிறான். மற்றவர்களின் உயிரை வாங்க அதற்காகப் பரிதாபப்படாதவன் தன்னுடைய உயிருக்கு ஆபத்து என்றபோது ஒரு மாறுபட்ட நடைமுறையைப்

பின்பற்றுகிறானன்றோ? இங்கே, ஒருவன் மகிழ்ச்சியுடன் ஆயிரக்கணக்கானோரடங்கிய, குற்றமற்றோரான, ஓரினத்தையே தன்னை இழிவு படுத்தின ஒருவனுக்காக கொன்று ஒழிக்க திட்டம் தீட்டி நிறைவேற்றும் நிலைக்கு வருகிறான். ஆனால் அவன் ஒருவனின் சொந்த உயிருக்கே ஆபத்து வரும் நிலையில் தாழ விழுந்து கெஞ்சி மன்றாடவும் தயாராக இருக்கிறான். அப்படியே இராஜாத்தி எஸ்தர் உட்கார்ந்திருந்த மெத்தையின்மேல் விழுந்து கிடந்தான். ராஜா அரண்மனைத் தோட்டத்திலிருந்து திரும்பிவந்து பார்க்கும்போது அவன் அந்த நிலையில் விழுந்து கிடந்ததைப்பார்த்து, நான் அரண்மனையிலிருக்கும்போதே என் கண்முன்னே இவன் இராஜாத்தியைப் பலவந்தம் செய்யவேண்டுமென்றிருக்கிறானோ என்று உரக்கக் கத்தினான். இது ஒரு நியாயமில்லாத குற்றச்சாட்டுத்தான். அங்கிருந்த யாவருக்குங்கூட அந்த உண்மைதெரியும். ஆனால் ஆமானுக்காக யாரொருவனும் முன்வந்து உண்மையைக்கூறி வாதாட விரும்பவில்லை. இராஜா ஆமானைக் கடுமையாகக் குற்றப்படுத்தியவுடன் ஆமோனின் முகத்தைப் பணியாட்கள் மூடிப்போட்டார்கள். அவனுடைய முடிவு அதுதான். அது அவனுடைய மரணத் தீர்ப்பு.

வசனம் 7:9

அப்பொழுது ராஜசமுகத்தில் இருக்கிற பிரதானிகளில் அற்போனா என்னும் ஒருவன்: இதோ, ராஜாவின் நன்மைக்காகப் பேசின மொர்தெகாய்க்கு ஆமான் செய்வித்த ஐம்பது முழ உயரமான தூக்குமரம் ஆமானின் வீட்டண்டையில் நாட்டப்பட்டிருக்கிறது என்றான். அப்பொழுது ராஜா: அதிலே அவனைத் தூக்கிப்போடுங்கள் என்றான்.

அதோடு முடியாமல், ஆமானுக்கு வெகு தீங்கு காத்திருந்தது. இராஜ சமுகத்தில் இருக்கிற பிரதானிகளில் அற்போனா என்னும் ஒருவன் இதோ இராஜாவின் உயிரைக் காப்பாற்றிய மொர்தெகாய்க்கு ஆமான் செய்வித்த ஐம்பது முழ தூக்குமரம் ஆமானின் வீட்டண்டையில் நாட்டப்பட்டிருக்கிறது என்று இராஜாவிடம் கூறினான். அப்பொழுது இராஜா ஆமானை அதிலே தூக்கிப்போடுங்கள் என்று உத்தரவிட்டான். ஆகவே, பணியாளர்கள் ஆமோனைக் கொண்டுபோய், அவன் மொர்தெகாய்க்காகச் செய்வித்திருந்த தூக்குமரத்தில் தூக்கிப் போட்டனர். படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம் அல்லவா (நீதி.26:27). மோசம் போகாதிருங்கள். தேவன் தம்மைப் பிரயாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்று வேதம் கூறுகிறதல்லவா (கலா.6:7).

ஆமான் தூக்கிலிடப்பட்டான். ஆனால் நாம் அவனுக்காகப் பரிதாபம் கொள்ள முடிவதில்லை. அவன் பொய் உரைத்தான். தற்பெருமை தலைக்கேறி நின்றான். ஒரு தனிப்பட்டவனைப் பழிவாங்க, பல்லாயிரம் பேரடங்கிய ஓரினத்தையே அவன் கொன்று ஒழிக்கத் திட்டமிட்டான். அது நிறைவேறுமட்டும் காத்திராமல், அந்த ஒருவனுக்காக ஒரு தூக்குமரத்தையே செய்வித்தான். அந்த ஒருவனைக் கொல்ல ஏற்பாடு செய்த பின், அந்த இனத்தை, குற்றமில்லாத இனத்தை

காப்பாற்ற அவன் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகையால் அந்த இனம் அழிந்தே போயிருக்கும். ஆனால் ஒரே நாளில் அனைத்து தீய திட்டங்களும் கவிழ்க்கப்பட்டுப்போய், அவனே அவன் செய்வித்த அந்த உயரமான தூக்கு மரத்திலேயே தூக்கிப் போடப்பட்டான்.

வசனம் 7:10

அப்படியே ஆமான் மொர்தெகாய்க்கு ஆயத்தம்பண்ணின தூக்குமரத்தில் ஆமானைத் தூக்கிப்போட்டார்கள். அப்பொழுது ராஜாவின் உக்கிரம் தணிந்தது.

இராஜா கோபவெறி கொண்டிருந்தான். ஆமான் கொல்லப்பட்ட பின்புதான் அமைதியடைந்தான். முழு அரசியல் செல்வாக்கில் அதிகார ஏணியின் உச்சியில் இருந்தவன் ஒழிக்கப்பட்டான். அந்தப் பதவிக்கு இப்போது யார்? இந்த முறை இராஜா, தன் முழு அதிகாரத்தையும் ஒருவனிடம் ஒப்படைப்பதானால் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பானன்றோ? தேவனுடைய பிள்ளைகளும்கூட, பிசாசின் தந்திரங்களுக்கு விலகி எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமன்றோ! விழித்திருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோவென்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் (1.பேது.5:8).

## அதிகாரம் 8
## இராஜாவின் புதிய கட்டளை

வசனம் 8:1-2

அன்றையதினம் அகாஸ்வேரு ராஜா யூதரின் சத்துருவாயிருந்த ஆமானின் வீட்டை ராஜாத்தியாகிய எஸ்தருக்குக் கொடுத்தான். மொர்தெகாய் ராஜசமுகத்தில் வந்தான். அவன் தனக்கு இன்ன உறவு என்று எஸ்தர் அறிவித்திருந்தாள். ராஜா ஆமானின் கையிலிருந்து வாங்கிப்போட்ட தம்முடைய மோதிரத்தை எடுத்து, மொர்தெகாய்க்குக் கொடுத்தான். எஸ்தர் மொர்தெகாயை ஆமானின் அரமனைக்கு அதிகாரியாக வைத்தாள்.

அடுத்த முதல் நடவடிக்கையாக, ஆமானின் குடியிருப்பை இராஜா எஸ்தருக்குக் கொடுத்தான். எஸ்தர் இராஜாவிடம் மொர்தெகாய் தனக்கு என்ன உறவு என்பதனையும், சிறுவயதுமுதல் அவள் பாதுகாத்து வளர்ந்து வந்த வரலாற்றையும் கூறியிருந்தாள். ஆகையால் அவன் இராஜசமூகத்தில் வரவழைக்கப்பட்டான். இராஜா, ஆமானிடம் கொடுத்திருந்த இராஜ மோதிரத்தை அவனிடமிருந்து வாங்கிவிட்டிருந்தான். அதனை இப்போது மொர்தெகாயிடம் கொடுத்தான். இங்கே நாம் காணும் மொர்தெகாய், இராஜாவைக் கொலை சதியிலிருந்து காப்பாற்றியவன். இராஜாத்தி எஸ்தரை சிறுபிராயமுதல் குழந்தையாகத் தத்தெடுத்து அன்போடு வளர்த்து ஆளாக்கியவன். தனிமையாக நின்ற ஆமானை எதிர்த்து அழித்தவன். அவன் இராஜாவின் பொறுப்புமிக்க

உயர்ந்த அதிகாரத்தில் இருக்கத் தகுதியுள்ளவனே. மொர்தெகாயின் இந்தச் செயல்களையெல்லாம் நாம் பார்க்கும்போது நமதாண்டவராகிய இயேசுவை நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் நம்மை அன்போடு பராமரித்து வளர்த்து வருகிறார். எல்லா பாவங்களையும் ஒருவராகவே எதிர்த்து நிற்கிறார். ஒருவர் என்றால் ஒருவராகவேதான் அவர் இருக்கிறார். நமக்காக ஒருவராகவே இருந்து பாடுபட்டு சிலுவையில் மரித்தார். ஒருவராகவே நமது இருதயதங்களின் வாசலருகே காத்து நிற்கிறார். நாம் அழைத்தாலன்றி அவர் நமது இருதயத்திலே உள்ளே வரமாட்டார்.

இராஜா மொர்தெகாயை அழைக்கிறான். தன் இராஜ்யத்தின் சகல அதிகாரங்களையும் அவனிடத்தில், இராஜா ஒப்படைத்தான். இதுபோலவேதான் யோசேப்பிற்கும் எகிப்து தேசத்தின் பார்வோன் இராஜா செய்தானன்றோ (ஆதி.41:42-43). தானியேலும் இதுபோலவே கௌரவம் செய்யப்பட்டான் (தானி.2:48).

வசனம் 8:3

பின்னும் எஸ்தர் ராஜசமுகத்தில் பேசி, அவன் பாதங்களில் விழுந்து, அழுது ஆகாகியனாகிய ஆமானின் தீவினையையும் அவன் யூதருக்கு விரோதஞ்செய்ய யோசித்த யோசனையையும் பரிகரிக்க அவனிடத்தில் விண்ணப்பம்பண்ணினாள்.

இப்போது ஆமான் எழுதியனுப்பின கடிதம், யூதர்களனைவரையும் கொல்லவெண்டுமென்று நாடெங்கிலும் எழுதியனுப்பப்பட்ட கடிதம், என்வாயிற்று? அது இராஜாவினால் முத்திரையிடப்பட்டு இருந்ததே! மேதிய, பெர்சியரின் சட்டங்கள் மாற்றப்படக்கூடாதவைகளாயிற்றே. அச்சட்டத்தின்படி யூதர்களுக்கு மரணம் நிச்சயம் காத்துக்கொண்டுதானேயிருந்தது. இது எஸ்தருக்கும் தெரியும். ஆகவே, அவள் இராஜாவிடம் சென்று, கண்ணீரோடு மன்றாடுகிறாள். ஆமான் அனுப்பியிருந்த அந்தக் கொடூரமான இராஜ கட்டளையை மாற்ற என்ன செய்வது?

வசனம் 8:4-8

அப்பொழுது ராஜா பொற்செங்கோலை எஸ்தருக்கு நீட்டினான். எஸ்தர் எழுந்திருந்து ராஜசமுகத்தில் நின்று: ராஜாவுக்குச் சித்தமாயிருந்து அவர் சமுகத்தில் எனக்குக் கிருபைகிடைத்து, ராஜசமுகத்தில் நான் சொல்லும் வார்த்தை சரியென்று காணப்பட்டு, அவருடைய கண்களுக்கு நான் பிரியமாயிருந்தால், ராஜாவின் நாடுகளெல்லாம் இருக்கிற யூதரை அழிக்கவேண்டும் என்று அம்மெத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன் தீவினையாய் எழுதின கட்டளைகள் செல்லாமற்போகப்பண்ணும்படி எழுதி அனுப்பப்படவேண்டும். என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும் என்றாள்.

அப்பொழுது அகாஸ்வேரு ராஜா ராஜாத்தியாகிய எஸ்தரையும் யூதனாகிய மொர்தெகாயையும் நோக்கி: இதோ, ஆமானின் வீட்டை எஸ்தருக்குக் கொடுத்தேன். அவன் யூதர்மேல் தன் கையைப்போட எத்தனித்தபடியால் அவனை மரத்தில் தூக்கிப்போட்டார்கள். இப்போதும் உங்களுக்கு இஷ்டமானபடி நீங்கள் ராஜாவின் நாமத்தினால் யூதருக்காக எழுதி, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரைபோடுங்கள். ராஜாவின்பேரால் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரைபோடப்பட்டதைச் செல்லாமற் போகப்பண்ண ஒருவராலும் கூடாது என்றான்.

இராஜா எஸ்தருக்கு, பொற்செங்கோலை நீட்டினான். எஸ்தர் இராஜ சமுகத்தில் நின்றாள், பேசினாள். இராஜா எஸ்தரிடத்திலும் மொர்தெகாயினிடத்திலும் பேசி, ஆமானின் குடியிருப்பை எஸ்தருக்குக்கொடுத்தேன். ஆமான் யூதர்மேல் தன் கையைப்போட எத்தனித்தபடியால் அவனை மரத்திலே தூக்கிப்போட்டார்கள். இப்போதும் உங்களுக்கு இஷ்டமானபடி ஒரு புதிய உத்தரவை நீங்கள் இராஜாவின் நாமத்தினால் எழுதி, இராஜாவின் மோதிரத்தால் முத்திரைபோடுங்கள் என்றான். இராஜாவின் பேரால் எழுதப்பட்டு, மோதிரத்தினால் முத்திரைபோடப்பட்ட அந்த ஆமானின் கடிதம் மாற்றப்படாமல்போனாலும் இக் கடிதம் புதிய உத்தரவை பிறப்பிக்கும் அதிகாரம் படைத்தது.

வசனம் 8:9-10

சீவான் மாதம் என்னும் மூன்றாம் மாதம் இருபத்துமூன்றாந்தேதியாகிய அக்காலத்திலேதானே ராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்கள். மொர்தெகாய் கற்பித்தபடியெல்லாம் யூதருக்கும் இந்துதேசம்முதல் எத்தியோப்பியா தேசமட்டுமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளின் தேசாதிபதிகளுக்கும், அதிபதிகளுக்கும், அதிகாரிகளுக்கும், அந்தந்த நாட்டில் வழங்கும் அட்சரத்திலும், அந்தந்த ஜாதியார் பேசும் பாஷையிலும், யூதருக்கு அவர்கள் அட்சரத்திலும் அவர்கள் பாஷையிலும் எழுதப்பட்டது. அந்தக் கட்டளைகள் அகாஸ்வேரு ராஜாவின் பேரால் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டபின், குதிரைகள்மேலும் வேகமான ஒட்டகங்கள்மேலும், கோவேறு கழுதைகள்மேலும் ஏறிப்போகிற அஞ்சற்காரர் கையில் அனுப்பப்பட்டது.

எஸ்தருக்கும், மொர்தெகாய்க்கும், முன்பு ஆமானுக்கு இருந்த அதே அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. என்ன செய்யமுடியும் என்று அவர்கள் யோசிக்க நேரமில்லை. மொர்தெகாய் உடனே செயல்ப்பட்டான். இராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்கள். புதியதொரு கட்டளை எழுதிமுடிக்கப்பட்டது. அந்தக் கடிதத்தின் நகல்கள் அந்தந்த நாட்டின் எழுத்திலும் பாஷையிலும் எழுதப்பட்டன. இராஜாவின் பேரால் எழுதப்பட்டு முத்திரையிடப்பட்டன. இராஜ்யமெங்கிலுமுள்ள 127 நாடுகளுக்கும், இராஜாவின் குதிரைகளிலும் ஒட்டகங்களிலும் ஏறிப்போகிற அஞ்சற்காரார் கையில் கொடுத்தனுப்பப்பட்டன. 127 நாடுகளின் தேசாதிபதிகளுக்கும் அந்த நாட்டின் அதிகாரிகளுக்கும் கொடுத்தனுப்பப்பட்டன.

அந்தப் புதிய கடிதத்திலே எழுதப்பட்டிருந்தது என்ன? அந்தப் பட்டணத்திலிருக்கிற யூதர் ஒன்றாய் சேர்ந்து, தங்கள் பிராணனைக் காப்பாற்றவும் தங்களை விரோதிக்கும் சத்துருக்களாகிய ஜனத்தாரும் தேசத்தாருமாகிய எல்லாரையும் அவர்கள் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் அழித்துக்கொன்று நிர்மூலமாக்கவும், அவர்கள் உடமைகளைக் கொள்ளையிடவும், இராஜா யூதருக்குக் கட்டளையிட்டார் என்று எழுதியிருந்தது. அது ஒரே ஒரு நாளைக்குமட்டே செயல்ப்படுத்தப்படவேண்டும். 12ம் மாதம் 13ம் தேதி மட்டும். அதன் படிவங்கள் ஒவ்வொரு நாட்டிலும் பிரசித்தம் பண்ணப்படவேண்டும். யூதர்கள் தங்களைக் காத்துக்கொள்ள ஆயத்தப்படும்படி இப்படிச் செய்யப்படவேண்டும். இந்த உத்தரவின் அடிப்படையிலான செயல்ப்பாடுகள் மிகவும் துரிதப்படுத்தப்பட்டன. அது யூதர்களின் ஜீவன் சம்பந்தப்பட்ட உத்தரவானபடியால் மிகவும் வேகத்துடனும் விவேகத்துடனும் செயல்ப்படுத்தப்பட்டது. அதுபோலவே இரட்சிப்பைத் தேடி நிற்போருக்கு தேவையான ஜீவ வசனங்களைப் பகிர்ந்து கொள்வதில் நாம் அதிக அக்கறையுடன் நடந்துகொள்ள வேண்டும். தேவனுடைய தூதன் அப்போஸ்தலரிடத்தில், நீங்கள் போய் தேவாலயத்தில் நின்று, இந்த ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்று கூறியதாக நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம் (சங்.5:20). உன் மூலம் ஜீவ வார்த்தைகளை எத்தனைபேர் கேட்டிருக்கக்கூடும்?

வசனம் 8:11-15

அவைகளில், அகாஸ்வேரு ராஜாவுடைய எல்லா நாடுகளிலும் ஆதார் மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியாகிய அந்த ஒரே நாளிலே, அந்தந்தப் பட்டணத்திலிருக்கிற யூதர் ஒன்றாய்ச் சேர்ந்து, தங்கள் பிராணனைக் காப்பாற்றவும், தங்களை விரோதிக்கும் சத்துருக்களாகிய ஜனத்தாரும் தேசத்தாருமான எல்லாரையும், அவர்கள் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிடவும், ராஜா யூதருக்குக் கட்டளையிட்டார் என்று எழுதியிருந்தது. யூதர் தங்கள் பகைஞருக்குச் சரிக்குச் சரிக்கட்டும்படி நியமித்த அன்றையதினத்தில் ஆயத்தமாயிருக்கவேண்டுமென்று அந்தந்த நாட்டிலுள்ள சகல ஜனங்களுக்கும் கூறப்படுகிறதற்காகக் கொடுக்கப்பட்ட கட்டளையின் நகல் இதுவே. இது ஒவ்வொரு நாட்டிலும் பிரசித்தம்பண்ணப்பட்டது. அப்படியே வேகமான ஒட்டகங்கள்மேலும், கோவேறு கழுதைகள்மேலும் ஏறிய அஞ்சற்காரர் ராஜாவின் வார்த்தையினால் ஏவப்பட்டு, தீவிரத்தோடே புறப்பட்டுப்போனார்கள். அந்தக் கட்டளை சூசான் அரமனையில் கொடுக்கப்பட்டது. அப்பொழுது மொர்தெகாய் இளநீலமும் வெள்ளையுமான ராஜவஸ்திரமும், பெரிய பொன்முடியும், பட்டும் இரத்தாம்பரமும் அணிந்தவனாய் ராஜாவினிடத்திலிருந்து புறப்பட்டான். சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருந்தது.

ஆகவே, மொர்தெகாய் ஒரு புதிய உத்தரவைப் பிறப்பித்து, யூதர்கள் தாமாகவே தங்களின் உயிர்களைக் காத்துக்கொள்ள வகைசெய்வித்தான். பின்னர் அவன் இராஜசமூகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றான். இப்போது அவன் எவ்வளவு

வேறுபட்டவனாகக் காணப்பட்டான். அவன் இளநீலமும் வெள்ளையுமான இராஜவஸ்திரமும், பெரிய பொன்முடியும், பட்டு இரத்தாம்பரமும் அணிந்தவனாகக் புறப்பட்டான். மிகவும் தாழ்மையாக இராஜ அரண்மனையின் வாசலிலே காத்திருந்த மொர்தெகாய், இராஜ கெம்பீரத்துடன் குதிரைமீதமர்ந்து அதே வாசல் வீதியாய் இப்போது செல்கிறான். இந்த மாற்றம், இந்தப் புதிய உத்தரவின் விளைவுகள் , மக்கள் அனைவர்மீதும் மகிழ்ச்சி ஆரவாரமாகப் பிரதிபலித்தது. சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்தது. இராஜ அதிகாரத்தின் பொறுப்பில் இப்போது தகுதியும் திறமையும் வாய்ந்தவன் இருக்கிறான். அப்படியானால் யாவும் நலமாகவே அமையும். இயேசு கிறிஸ்துவுக்கு தனது இருதயத்திலே முழு இடமளிக்கிறவன் எப்போதும் மகிழ்ந்து களிகூருவான். கிறிஸ்துவைத் தாபரமாகக்கொண்ட ஒருவன் அவ்வாறிருக்க, இராஜாக்களுக்கு இராஜனாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் அவர் எற்றுக்கொள்ளப்படும்போது, வெளி 19:12 ல் கூறியுள்ளபடி கண்கள் அக்கினி ஜீவாலையைப்போலவும், சிரசின்மேல் அநேக கிரீடங்களுடனும், இருப்பவரவரன்றோ? ஏற்றக்கொள்கிறவன் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவானல்லவா?

அப்பொழுது வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன் (வெளி 5:13). அது என்ன மகிமையான நாள்!

வசனம் 8:16

இவ்விதமாய் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று.

இந்தப் புதிய இராஜ கட்டளையைக் கண்டு யூதர்கள் மிக்க வெளிச்சமும், மகிழ்சியும், களிப்பும், கனமும் அடைந்தனர். வேதத்தில் அவர்களின் மட்டற்ற மகிழ்ச்சியைக் காட்ட வார்த்தைகள் அடுக்கிக்கொண்டே போகப்பட்டுள்ளது. சங்கீதக்காரன் சங்கீதம் 97:11ல் நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது என்று பாடுகிறான். 16ம் வசனத்தில் அடுக்கியுள்ள வார்த்தைகளில் கடைசியாகக் கூறப்பட்டுள்ள கனமும் என்ற வார்த்தை சில அரிய கருத்துக்களை விளக்குவதாய் உள்ளது. அதுவரை யூதர்களுக்கு நேரிடப்போவது குறித்து யாரொருவரும் இரக்கப்படவோ அல்லது வருத்தப்படவோ இல்லையெனலாம். ஆனால் இந்த மாற்றத்திற்குப் பிறகு யூதர்களில் ஒருவன் (மொர்தெகாய்) இராஜ அதிகாரத்தின் உச்சியிலும், ஒருத்தி (எஸ்தர்) இராஜஸ்திரியாகவும் அமர்த்தப்பெற்றனர். இந்த நிலைமாற்றம் முழுமையாகவும், எதிர்பார்ப்பற்றதாகவும் வந்தது. அவர்கள் இனி யாருக்கும் அஞ்ச வேண்டும்? கிறிஸ்தேசு நமது இருதயங்களில் ஆட்சிசெய்யும்போது, யாருக்கும் அஞ்சவேண்டாம். பயப்படாதீர்கள் என்றுரைக்கிறார் அன்றோ?

வசனம் 8:17

ராஜாவின் வார்த்தையும் அவனுடைய கட்டளையும் போய்ச்சேர்ந்த எல்லா நாடுகளிலும், எல்லாப் பட்டணங்களிலும் யூதருக்குள்ளே அது மகிழ்ச்சியும், களிப்பும், விருந்துண்டு கொண்டாடும் நல்ல நாளுமாயிருந்தது. யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்ததினால், அவர்களில் அநேகர் யூதமார்க்கத்தில் அமைந்தார்கள்.

இராஜாவின் வார்த்தைகளையும், கட்டளைகளையும் போய்ச் சேர்ந்த எல்லா நாடுகளிலும், யூதர்கள் விருந்துண்டு மகிழ்ச்சியும் களிப்பும் பொங்க வீட்டிற்கு வீடு கொண்டாடி மகிழ்ந்தார்கள். அவர்களின் களிப்பு நமக்கு நன்கு விளங்குகிறதாய் உள்ளது. அதுபோலவே அந்த அரசின் குடிமக்களும் யூதர்களின் நிலையைப் புரிந்துகொண்டு, கொண்டாடி மகிழ்ந்தனர். அந்த மாற்றத்தினால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் மனதைப் பறிகொடுத்த சிலர், அவர்களும் யூதர்களாக மாறிவிடத் துடித்துக்கொண்டிருந்தனர். எந்த நேரத்தில் என்ன நேரிடுமோவெனப் பயந்துபோன அவர்கள், ஆபத்தைத் தவிர்ப்பதற்காக, அந்த யூதர்களுடன் இணைந்துவிடத் துணிந்துவிட்டனர். ஆனால் அவர்கள் அப்படி யூதர்களுடன் இணைந்துவிடத் துடித்ததன் உண்மையான காரணம் அவர்கள் தேவனாகிய கர்த்தரை விசுவாசித்ததேயாகும் என்று நாம் அறியக்கூடுமானால் நலமாக இருக்கும். ஆனால் நாம் இதை இந்தப் புத்தகத்திலே வாசிப்பதில்லை.

## அதிகாரம் 9

## யூதர்களின் வெற்றி

வசனம் 9:1-4

ராஜாவின் வார்த்தையின்படியும் அவனுடைய கட்டளையின்படியும் செய்யப்படுகிறதற்கு, ஆதார் மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியிலே யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என்று நம்பினார்களே. அந்நாளிலேதானே, யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும்படிக்குக் காரியம் மாறுதலாய் முடிந்தது. யூதர் அகாஸ்வேரு ராஜாவின் சகல நாடுகளிலுமுள்ள பட்டணங்களிலே தங்களுக்குப் பொல்லாப்பு வரப்பண்ணப் பார்த்தவர்கள்மேல் கைபோடக் கூடிக்கொண்டார்கள். ஒருவரும் அவர்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதிருந்தது. அவர்களைப்பற்றிச் சகல ஜனங்களுக்கும் பயமுண்டாயிற்று. நாடுகளின் சகல அதிகாரிகளும், தேசாதிபதிகளும், துரைகளும், ராஜாவின் காரியங்களை நடப்பிக்கிறவர்களும், யூதருக்குத் துணைநின்றார்கள். மொர்தெகாயினால் உண்டான பயங்கரம் அவர்களைப் பிடித்தது. மொர்தெகாய் ராஜாவின் அரமனையில் பெரியவனாயிருந்தான். அவனுடைய கீர்த்தி எல்லா நாடுகளிலும் பிரசித்தமாயிற்று. இந்த மொர்தெகாய் என்பவன் மேன்மேலும் பெரியவனானான்.

இராஜ முத்திரையிடப்பட்ட மொர்தெகாயின் உத்தரவு இரண்டாவதானது. முதலாவதாக அனுப்பப்பட்ட ஆமானின் உத்தரவு, கட்டளை அங்கேதானே, அப்படியே இருந்தது. அது மாற்றப்படக்கூடாதது. அதற்கேற்றபடி மொர்தெகாய் செய்யக்கூடிய மிகச் சிறந்த செயல், யூதர்களை, அந்த முதலாவது கட்டளையின்படி கொல்ல முயற்சிப்போரை எதிர்த்துத் தாக்கி அழித்து, அந்தநாளிலே அவர்களைக் கொள்ளையிடுவதேயாகும். அந்த நாளும் வந்தது. யூதர்கள் அங்காங்கே ஒன்று சேர்ந்து, தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஆயத்தமாயினர். ஆனால் யூதர்களை எதிர்த்து, அவர்களைக் கொல்ல யாருக்கும் துணிவு ஏற்படவில்லை. பிரதானிகளும், தேசாதிபதிகளும், அதிபதிகளும் இராஜாவின் போர்வீரர் அனைவரும் யூதர்களுக்குத் துணை நின்றார்கள். மொர்தெகாயினால் உண்டான பயங்கரம் அனைவரையும் பிடித்தது. முதலில், யூதர்கள் அனைவரையும் கொன்றுபோடும்படியாக எழுதப்பட்டிருந்த ஆமானின் கடிதம் அவர்களுக்குக் கிடைத்திருந்தது. இரண்டாவதாக வேறொரு கடிதம், யூதனான மொர்தெகாயினுடையது. அதுவும் அவர்களுக்குக் கிடைத்தது. மொர்தெகாயின் செய்கை, நாடு முழுமைக்கும் அவனைப் பிரசித்தப்படுத்தியது. அவன் மேலும் மேலும் அதிகாரம் பெற்று விளங்கினான். ஆட்சியாளர்கள் அவனைக் கண்டு மிகவும் அஞ்சினார்கள். அவர்கள் யாருடைய பக்கத்தில் நின்று செயல்படவேண்டுமென்று அறிந்திருந்தனர். நமது உயிருக்கு ஆபத்துவரும்போது, நமது கொள்கைகளை நாம் எவ்வாறு மாற்றிக் கொள்கிறோம் என்பது உண்மையில் மிக வியப்பாகவே உள்ளது.

வசனம் 9:5-10

அப்படியே யூதர் தங்கள் சத்தருக்களையெல்லாம் பட்டயத்தால் வெட்டிக்கொன்று நிர்மூலமாக்கி, தங்கள் இஷ்டப்படி தங்கள் பகைஞருக்குச் செய்தார்கள். யூதர் சூசான் அரமனையிலும் ஐந்நூறுபேரைக் கொன்று நிர்மூலமாக்கினார்கள். அம்மெத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் யூதருடைய சத்துருவின் குமாரரான பர்சான்தாத்தா, தல்மோன், அஸ்பாதா, பொராதா, அதலியா, அரிதாத்தா, பர்மஷ்டா, அரிசாய், அரிதாய், வாய்சாதா ஆகிய பத்துப்பேரையும் கொன்றுபோட்டார்கள். ஆனாலும் கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை.

ஆனால் யூதர்களுக்கு விரோதிகள் இல்லாமலும் இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் நூற்றுக்கணக்கானவர்களை யூதர்கள் தாக்கி அழித்துக் கொன்றுபோட்டனர். அவ்விதம் யூதர்களை எதிர்த்தவர்களில் ஆமானின் பத்துக் குமாரரும் அடங்குவர். யூதர்கள் அந்தப் பத்துப்பேரையும் தாக்கி, வெட்டிக் கொன்று போட்டனர். ஆனால் யூதர்கள் யாரையும் கொள்ளையிடவில்லை. மொர்தெகாயின் உத்தரவின்படி, எதிர்த்தவர்களைக் கொன்று கொள்ளையிட அவர்களுக்கு அனுமதியிருந்தது. ஆனால் யூதர்கள் யாரையும் கொள்ளையிடவில்லை. அவர்களை எதிர்த்தவர்களின் ஏதேனும் ஒரு உடமையாகிலும்கூடத் தொடப்படவில்லை. அவர்கள் தங்கள் தங்களின் உயிர்களைக் காத்துக்கொள்ளவே போராடினர். இது அவர்களுடைய

நற்பண்புகளைக் காட்டும் குறிப்புகளாகவே வேதத்தில் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

வசனம் 9:11-12

அன்றையதினம் சூசான் அரமனையில் கொன்றுபோடப்பட்டவர்களின் தொகை ராஜசமுகத்தில் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது ராஜா, ராஜாத்தியாகிய எஸ்தரை நோக்கி: யூதர் சூசான் அரமனையில் ஐந்நூறுபேரையும் ஆமானின் பத்துக் குமாரரையும் கொன்று நிர்மூலமாக்கினார்கள். ராஜாவின் மற்ற நாடுகளிலும் என்ன செய்திருப்பார்களோ! இப்போதும் உன் வேண்டுதல் என்ன? ஆது உனக்குக் கட்டளையிடப்படும். உன் மன்றாட்டு என்ன? அதின்படி செய்யப்படும் என்றான்.

இந்த நிகழ்ச்சிகளைப்பற்றிய செய்திகள் யாவும் இராஜாவின் சமுகத்தில் கொண்டுவரப்பட்டது. சூசான் அரண்மனையில் தாக்கிக் கொல்லப்பட்ட 500 பேரைப் பற்றிய அந்தச் செய்தியும் இராஜாவுக்குத் தெரிவிக்கப்பட்டது. அரண்மனையில்கூட யூதருக்கு எத்தனை எதிரிகள். அதிகாரம் குவிந்துள்ள இடங்களிலெல்லாம் சாத்தானின் செயல்ப்பாடுகள் இருப்பதைக் காணமுடிகிறதல்லவா? சூசான் அரண்மனையில் 500 எதிரிகள் கொல்லப்பட்டனர். ஆமானின் குமாரர்கள் பத்துப்பேரும் கொல்லப்பட்டனர் என்று அகாஸ்வேரு இராஜா எஸ்தரிடம் கூறுகிறான். இன்னுமுள்ள இராஜாவின் மற்ற நாடுகளிலும் எத்தனையோ விரோதிகள் கொல்லப்பட்டிருப்பர். இப்போதும் உன் வேண்டுதல் என்ன? அது உனக்குக் கட்டளையிடப்படும். உன் மன்றாட்டு என்ன? அதின்படி செய்யப்படும் என்று இராஜா கூறினான்.

வசனம் 9:13

அப்பொழுது எஸ்தர்: ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், இன்றையதினத்துக் கட்டளையின்படியே சூசானிலிருக்கிற யூதர் நாளையதினமும் செய்யவும், ஆமானின் பத்துக் குமாரரின் உடலையும் தூக்குமரத்தில் தூக்கிப்போடவும் உத்தரவாகவேண்டும் என்றாள்.

வேறொன்றும் தேவையில்லை, எனது ஜனங்கள் பத்திரமாக இருக்கிறார்கள் என்று எஸ்தர் கூறுவாள் என்று ஒருவேளை நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் அவளுக்குத் தெரியும், மேலும் எதிரிகள், அங்கே சூசான் அரண்மனையில் இருக்கிறார்கள் என்று. ஆகையால் அவளுடைய வேண்டுதல்களை அதோடு நிறுத்திக்கொள்ளாமல் இராஜாவிற்குச் சித்தமானால், இன்றைய தினத்துக் கட்டயின்படியே சூசானிலிருக்கிற யூதர் நாளையதினமும் செய்யவும், ஆமானின் 10 குமாரரின் உடலையும் தூக்குமரத்தில் தூக்கிப்போடவும் உத்தரவாகவேண்டும் என்று அவள் இராஜாவினிடம் கேட்கிறாள். ஆனால் இது தேவையில்லாத பழிவாங்கல்தான். அந்தப் பத்துப்பேரும் ஏற்கெனவே கொல்லப்பட்டுவிட்டனர். அவர்களின் உடல்களைத் தூக்குமரத்தில் தூக்கிப்போடுவதால் என்ன இலாபமோ? வேதத்தில் உபாகமம் என்ற உபதேச

ஆகம நூலில் கூறியுள்ளபடி ஒருவன் கொலைசெய்யப்படும்படி மரத்திலே தூக்கிப்போடப்பட்டால் அவன் தேவனால் சபிக்கப்பட்டவன் என்று அறிகிறோம் (உபா.21:22-23). இந்த ஆமானின் குமாரரான 10 பேரும் யூதர்களைத் தாக்கியவர்கள். ஆகையால் நீதி நிலைநிறுத்தப்பட அவ்வாறு செய்யப்படவேண்டும் என்று அவள் விரும்பினாள்போலும்.

வசனம் 9:14-16

அப்படியே செய்யும்படிக்கு ராஜா உத்தரவு கொடுத்தான். அதற்குச் சூசானிலே கட்டளை பிறந்தது. ஆமானின் பத்துக் குமாரருடைய உடலையும் தூக்கிப்போட்டார்கள். சூசானிலிருக்கிற யூதர் ஆதார் மாதத்தின் பதினாலாந்தேதியிலும் கூடிச்சேர்ந்து, சூசானிலே முந்நூறுபேரைக் கொன்றுபோட்டார்கள். ஆனாலும் கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை. ராஜாவின் நாடுகளிலுள்ள மற்ற யூதர்கள் தங்கள் பிராணனைத் தற்காக்கவும், தங்கள் பகைஞருக்கு விலகி இளைப்பாறுதல் அடையவும் ஒருமிக்கச் சேர்ந்து, தங்கள் விரோதிகளில் எழுபத்தையாயிரம் பேரைக் கொன்றுபோட்டார்கள். ஆனாலும் கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை.

இராஜா அப்படியே செய்யும்படி உத்தரவு கொடுத்தான். அந்தப் பத்துப்பேரும் தூக்குமரத்திலே தூக்கிப்போடப்பட்டனர். அடுத்தநாளிலும் சூசானிலிருக்கிற யூதர் கூடிச்சேர்ந்து சூசானில் முன்னூறுபேரைக் கொன்று போட்டார்கள். மற்றுமுள்ள எல்லா நாடுகளிலுமுள்ள மற்ற யூதர்கள் தங்கள் பிராணனைத் தற்காக்கவும், தங்கள் பகைஞருக்கு விலகி இளைப்பாறுதல் அடையவும் ஒருமிக்கச் சேர்ந்து, தங்கள் விரோதிகளில் 75000 பேரைக் கொன்றுபோட்டார்கள். ஆமான் யூதர்களை அழிக்க அநேகம்பேரை பகைவர்களாக்கியிருந்தான். ஆனால் யூதர்கள் ஒன்றுசேர்ந்து அவர்களை அழித்தனர். இங்கே மிக அருமையானதொரு படிப்பினை நமக்கு உண்டு. மறுபடியும் மறுபடியும் அவர்கள் கொள்ளையிட தங்கள் கையை நீட்டவில்லை என்று நாம் அறிகிறோம்.

வசனம் 9:17-19

ஆதார் மாதத்தின் பதின்மூன்றாந்தேதியிலே இப்படிச் செய்து, பதினாலாந்தேதியிலே இளைப்பாறி, அதை விருந்துண்டு சந்தோஷப்படுகிற பண்டிகை நாளாக்கினார்கள். சூசானிலுள்ள யூதரோவென்றால், அந்த மாதத்தின் பதின்மூன்றாந்தேதியிலும் பதினாலாந்தேதியிலும் ஏகமாய்க்கூடி, பதினைந்தாந்தேதியிலே இளைப்பாறி, அதை விருந்துண்டு சந்தோஷப்படுகிற பண்டிகை நாளாக்கினார்கள். ஆதலால் அலங்கமில்லாத ஊர்களில் குடியிருக்கிற நாட்டுப்புறத்தாரான யூதர்கள் ஆதார் மாதத்தின் பதினாலாந்தேதியைச் சந்தோஷமும், விருந்துண்கிற பூரிப்புமான நாளும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்புகிற நாளுமாக்கினார்கள்.

அதற்கு அடுத்த நாளை, அந்த யூதர்கள், இளைப்பாறி விருந்துண்டு சந்தோஷப்படுகிற பண்டிகை நாளாக்கினார்கள். அது நன்றி பாராட்டுதலுக்குரிய நாளாகும். மொர்தெகாய் அந்த நாளை ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிற பண்டிகை நாளாக்க விரும்பினான். ஆகையால் அவன் இந்த வர்த்தமானங்களை எழுதி சமீபத்திலும் தூரத்திலுமிருக்கிற அகாஸ்வேரு இராஜாவின் சகல நாடுகளிலுமுள்ள எல்லா யூதர்களுக்கும் நிருபங்களை அனுப்பி, வருடந்தோறும், ஆதார் மாதத்தின் பதினாலாம் பதினைந்தாம் தேதிகளை பண்டிகை நாட்களாகக் கொண்டாடும்படி செய்தான். அந்த நாளிலே அவர்கள் விருந்துண்டு சந்தோஷங்கொண்டாடவும் ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும் வேண்டும் என்று அறிவித்தான். மேலும் அவன் அந்த நிருபத்தில் அந்த நாட்களில் ஏழை எளியவர்களுக்கு தானதர்மஞ் செய்யவும் வேண்டுமென்று திட்டம் பண்ணினான். பொதுவாக நாம் செய்கிற கொண்டாட்டங்களும் பரிசில் அனுப்புதலும் நமக்குத் திரும்ப அது வேறுவகையில் கொடுத்துவிடப்படும் என்ற எண்ணத்தில்தான் செய்யப்படுவதாகும். ஆனால் இங்கே ஏழை எளியவர்களுக்கு வரிசைகள் அனுப்பப்படல் வேண்டும் என்ற கொள்கை ஏற்படுத்தப்பட்டது. ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்று வேதம் கூறுகிறது (நீதி.19:17).

வசனம் 9:26-28

ஆகையினால் அந்த நாட்கள் பூர் என்னும் பேரினால் பூரீம் என்னப்பட்டது. அவன் அந்த நிருபத்தில் எழுதியிருந்த எல்லா வார்த்தைகளினிமித்தமும், தாங்களே இந்த விஷயத்தில் அநுபவித்தவைகளினிமித்தம் தங்களுக்கு நேரிட்டவைகளினிமித்தமும், யூதர் அதைத் திட்டப்படுத்தி, அந்த இரண்டு நாட்களைக்குறித்து எழுதியிருக்கிறபடியே, அவைகளை வருஷந்தோறும், அவைகளின் சரியான காலத்திலே ஆசரியாமலிருப்பதில்லை என்பதையும், இந்த நாட்கள் எல்லாத் தலைமுறைகளிலும், வம்சங்களிலும், தேசங்களிலும், ஊர்களிலும் நினைவுகூரப்பட்டு ஆசரிக்கப்படவேண்டும் என்பதையும், இந்தப் பூரீம் என்னும் பண்டிகை நாட்கள் யூதருக்குள்ளே தவறிப்போகாமலும், அவைகளை நினைவுகூருதல் தங்கள் சந்ததியாருக்குள்ளே ஒழிந்துபோகாமலும் இருக்கவேண்டும் என்பதையும், தங்கள்மேலும் தங்கள் சந்ததியார்மேலும், தங்கள் மார்க்கத்தில் அமையப்போகிற மற்ற யாவர்மேலும் கடனாக நியமித்துக்கொண்டார்கள்.

அந்தப் பண்டிகை நாட்கள் பூரீம் என்றழைக்கப்பட்டு, இன்று யூதர்களின் பண்டிகை நாட்களாக அவர்களால் கொண்டாடப்படுகின்றன. 23 லிருந்து 28 வரையிலான வசனங்களில் ஏன் அப் பண்டிகை அப்பெயரால் கொண்டாடப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தவறாமல், குறைவில்லாமல் அந்தப் பண்டிகை கொண்டாடப்படவேண்டும் என அந்த உத்தரவு கூறுவதாக நாம் வாசிக்கிறோம். யூதர்கள் இந்த இரட்சிப்பின் நடவடிக்கையை என்றும் மறந்துவிடவே கூடாது என்று அவர்கள் விரும்புகின்றனர்.

இது கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஓர் உண்மையை என்றும் நினைவில் கொள்ள வகைசெய்யவேண்டியதாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்குச் செய்த நன்மைகள் யாவற்றையும் மறந்துபோகாமல் நாம் என்றும் நினைவில் கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம் (1.கொரி.11:24).

வசனம் 9:29

பூரீமைக்குறித்து எழுதியிருக்கிற இந்த இரண்டாம் நிருபத்தைத் திடப்படுத்தும்படிக்கு, அபியாயேலின் குமாரத்தியாகிய எஸ்தர் என்னும் ராஜாத்தியும், யூதனாகிய மொர்தெகாயும், பின்னும் மகா உறுதியாய் எழுதினார்கள்.

இந்த வசனத்தில் பூரீமைக்குறித்து எழுதியிருக்கிற இந்த இரண்டாம் நிருபத்தை திடப்படுத்தும்படி எஸ்தர் என்னும் ராஜாத்தியும் யூதனாகிய மொர்தெகாயும் பின்னும் மகா உறுதியாய் எழுதினார்கள் என்று நாம் வாசிக்கிறோம். எஸ்தரும், மொர்தெகாயும் பலத்தின்மேல் பலம் அடைந்து (சங்.84:7) அதிகாரத்தின் உச்சிக்கே சென்றுவிட்டதை இது காட்டுகிறது.

வசனம் 9:30

யூதனாகிய மொர்தெகாயும், ராஜாத்தியாகிய எஸ்தரும் யூதருக்கு உறுதிப்பாடுபண்ணினதும், அவர்கள்தானே உபவாசத்தோடும் அலறுதலோடும் ஆசரிப்போம் என்று தங்கள்மேலும் தங்கள் சந்ததியார்மேலும் கடனாக நியமித்துக்கொண்டதுமான, பூரீம் என்னப்பட்ட இந்த நாட்கள் அவைகளின் சரியான காலங்களில் ஆசரிக்கப்படும் காரியத்தை உறுதியாக்க,

மொர்தெகாயும் அகாஸ்வேரு இராஜாவின் இராஜ்யத்தில் உள்ள எல்லா நாடுகளிலுமிருக்கிற எல்லா யூதருக்கும் சமாதானமும் உண்மையுமான வார்த்தைகளையுடைய நிருபங்களை எழுதி அனுப்பினான். ஆண்டவராகிய இயேசுவின் அன்பு வார்த்தைகள் நம்முடைய நினைவிற்கு வருகின்றன. சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோ.14:27). மேலும் அவர், நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்றார். சமாதானத்தின் வார்த்தைகள், யூதருக்கு அரச அதிகாரபீடத்திலிருந்து, எஸ்தராலும் மொர்தெகாயாலும் அனுப்பப்பட்டன. அதுபோலவே சமாதானத்தின் வார்த்தைகள் என்றென்றுமுள்ள தேவனின் சர்வாதிகாரத்திலிருந்து நமக்குக் கிடைக்க வல்லதாயிருக்கின்றன.

வசனம் 9:31-32

அவன் அகாஸ்வேருவின் ராஜ்யத்திலுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளிலும் இருக்கிற எல்லா யூதருக்கும் சமாதானமும் உண்மையுமான வார்த்தைகளையுடைய நிருபங்களை அனுப்பினான். இப்படியே எஸ்தரின்

கட்டளையானது பூரீம் நாட்களைப்பற்றின இந்த வர்த்தமானங்களைத் திடப்படுத்தினது. அது ஒரு புஸ்தகத்தில் எழுதப்பட்டது.

இந்த விருந்தும் கொண்டாட்டமும் ஒரு சாதாரண நிகழ்ச்சிமட்டுமல்ல. இது பெரிய விடுதலையும் கூட. அது கொண்டாடப்படுவதற்கான வழிவகைகளை எஸ்தர் மிகவும் கவனத்துடன் அமைத்துக்கொடுத்தாள். ஒவ்வொரு தலைமுறையினரும் மிக கவனத்துடன் இந்தச் செயல்முறைகளைப் பின்பற்றி இந்தப் பண்டிகை நிறுத்தப்படாமல் தொடரும்படி பார்த்துக்கொள்ள கடமைப்பட்டிருந்தனர். அதுபோலவே நாமும் நமது இரட்சகரான இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் என்றென்றும் நினைவில் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். தலைமுறை தலைமுறையாக இதைச் செய்யவேண்டியது நமது ஒவ்வொருவரின் கடமையாக உள்ளது.

எஸ்தரின் கட்டளைகளும், அந்தப் பண்டிகை கொண்டாடப்படுவது குறித்த அனைத்து மொர்தெகாயின் கட்டளைகளுமான வர்த்தமானங்கள், மறந்துவிடாதபடி ஒரு புத்தகத்தில் எழுதிவைக்கப்பட்டது. அதுபோலவே நாம் பின்பற்றி நடப்பதற்காக ஒரு புத்தகம் எழுதிவைக்கப்பட்டுள்ளது (அதுதான் சத்தியவேதம்). நாம் தினமும் ஒழுங்காக வாசித்து அதன்படி நடந்து, அதனை நமது பிள்ளைகளுக்குப் போதித்துவருகிறோமா?

## அதிகாரம் 10
# மொர்தெகாயின் உயர்ந்த நிலை

வசனம் 10:1-2

ராஜாவாகிய அகாஸ்வேரு தேசத்தின்மேலும், சமுத்திரத்திலுள்ள தீவுகளின்மேலும், பகுதி ஏற்படுத்தினான். வல்லமையும் பராக்கிரமுமான அவனுடைய எல்லாச் செய்கைகளும், ராஜா பெரியவனாக்கின மொர்தெகாயினுடைய மேன்மையின் விர்த்தாந்தமும், மேதியா பெர்சியா ராஜாக்களின் நடபடி புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

அகாஸ்வேரு இராஜா அவனுடைய தேசத்தின் நாடுகள்மேலும் தீவுகள்மேலும் புதிய வரிகள் பகுதிகள் ஏற்படுத்தினான். அதுபோல வரி போடுவது, இப்போதும் எப்போதும் உள்ளதுபோன்றதொரு ஆட்சிக்கடனேயாகும். ஆனால் அவன் ஏன் அதைச் செய்தான் என்று வேதத்தில் கூறப்படவில்லை. ஆனால் அந்த வரிவிதிப்பை அவன் இராஜ்யத்தின் எல்லா நாடுகளிலும் ஒருகோடியிலிருந்து மறுகோடிவரைக்கும் விதித்தான் என்று பார்க்கிறோம்.

அகாஸ்வேரு இராஜா மிகவும் வல்லமை உள்ளவனாக அவன் செய்த எல்லா மகத்துவமான காரியங்களும், அவனுடைய வலிமையும் அதிகாரமும்பற்றிய எல்லா வர்த்தமானங்களும் மேதியா, பெர்சியா இராஜாக்களின் நடபடி

புத்தகத்தில் எழுதிவைக்கப்பட்டுள்ளன. இராஜாக்களும் ஆட்சியாளர் அனைவரும் தங்களின் சிறந்த செயல்கள் அனைத்தையும் வரலாற்றில் எப்பொழுதும் நினைவுகூரும்படி நடபடிகளின் புத்தகங்களில் எழுதிவைப்பது முறையாக இன்றுவரை நடைபெற்றுவருகிறது. இது ஒரு சாதாரண நடைமுறைதான். ஆனால் ஆகாஸ்வேரு இராஜா அவனுடைய சிறப்புச் செயல்களை மட்டுமன்றி, மொர்தெகாயின் அனைத்துச் சிறப்புக்களையும், இராஜா அவனை உயர்த்திய அந்த நிலையில் அவன் ஆற்றிய அனைத்துச் செயல்களையும்கூட எழுதிவைத்தான்.

மொர்தெகாய் எவ்வாறெல்லாம் சிறப்புற உயர்ந்துள்ளான். இந்தப் புத்தகத்தின் ஆரம்பத்தில் இராஜாவின் அரண்மனை வாசலண்டை நின்றிருந்த ஒரு சாதாரண வாயில் காப்போனாக நாம் அவனைக் காண்கிறோம். ஆனால் செயல்படவேண்டிய தருணங்கள் வந்துற்றபோது அவன் உறுதியாக நின்று செய்ல்ப்பட்டானன்றோ? அதன் விளைவாக அவன் அந்த இராஜ்யத்தின் மிக உயர்ந்த பதவிக்கன்றோ உயர்த்தப்பட்டான். தேவன் உரைப்பதாவது என்னை கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் என்பதே (1.சாமு.2:30). அது இன்றும் நிலைபெற்று நிகழ்கிறதை நாம் காணமுடிகிறது.

வசனம் 10:3

யூதனாகிய மொர்தெகாய் ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவதானவனும், யூதருக்குள் பெரியவனும், தன் திரளான சகோதரருக்குப் பிரியமானவனுமாயிருந்ததும் அன்றித் தன் ஜனங்களுடைய நன்மையை நாடி, தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசுகிறவனுமாயிருந்தான்.

இந்தக் கடைசி வசனத்தில் மொர்தெகாய், அதிகாரத்தில் அமர்த்தப்பட்டபோது அவன் எவ்வாறு இருந்தான் என்று நாம் வாசித்தறிகிறோம். நாம் தாழ்மையான நிலையில் இருக்கும்போது செயல்ப்படவேண்டிய முறைகள் வேறு. அது குறைவானது. அதே நேரத்தில் நாம் பதவி உயர்த்தப்பட்டு அதிகாரத்தில் இருக்கும்போது செயல்ப்படவேண்டிய முறைகள் வேறு. மொர்தெகாயும் அதுபோலவே செயல்ப்பட்டான். சிறந்து விளங்கினான் என்று வேதம் கூறுகிறது.

(1) யூதர்களுக்குள் பெரியவனானான்.
(2) தன் திரளான சகோதரருக்குப் பிரியமானவனுமாயிருந்தான்
(3) தன் ஜனங்களுடைய நன்மையை நாடினவனாயிருந்தான்
(4) தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசுகிறவனாயுமிருந்தான்.

மொர்தெகாய்க்குத்தான் எத்தனை பாராட்டுகள்! முதலாவது அவன் யூதருக்கெல்லாம் பெரியவனாகவிருந்தான். அவனுடைய இனத்தாரால் மிகவும் விரும்பப்பட்டவனாகவும் இருந்தான். இது ஒரு பெரிய சாதனை. ஒருவேளை அவன் செய்த பெரியதான காரியங்களுக்காக அப்படியிருக்கலாம். மொர்தெகாய் அந்த வெற்றிகளினால் பெருமையடைந்து அமைதிகொள்ளவில்லை. தொடர்ந்து அவனுடைய மக்களுக்காக உழைத்துக்கொண்டேயிருந்தான். அவன் தொடர்ந்து

செயல்ப்பட்டான். நன்மை செய்வதில் அவன் சோர்ந்துபோகவில்லை (கலா.6:9). அதே நேரத்தில் அவன் தனது சொந்த நன்மைக்காகச் செயல்ப்படாமல் அவனுடைய அனைத்து மக்களின் நன்மைகளுக்காகப் பாடுபட்டான்.

கடைசியாக அவன் தன் ஜனங்களுடைய நன்மையை நாடி தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசுகிறவனாயிருந்தான். இந்தச் செயலில் அவன் சாத்தானை எதிர்த்து நமக்காகப் பாடுபடும் நமது ஆண்டராகிய இயேசுவை நமக்கு நினைவூட்டுகிறவனாக உள்ளான். நமது ஆண்டவர் அதோடு நில்லாமல் பரலோகத்திலே நமக்காக பரிந்து பேசுகிற பரம ஆசாரியனாக இருக்கிறார் அல்லவோ? இன்னும் நமக்காகப் பரிசுத்தாவியானவரை அனுப்பி அனைத்துலகிலுமுள்ள நாம் அனைவரும் அவரில் உறுதிப்படவும், அவரை அறியாதவர்களை அவரிடத்தில் சேர்க்கவும் இவ்வளவாய் அன்புகூர்ந்தாரல்லவா?

மொர்தெகாய் மேலும் மேலும் உயர்ந்து வருவதை நாம் கண்டு அதை உணர்ந்தவர்களாகச் செயல்ப்படக்கூடிய குறிப்புகளை நாம் இந்தப் புத்தகத்தில் கடைசியாக வாசிக்கிறோம். அவ்வாறு முன்னேற்றப் பாதையிலேயே சென்று மறையும் ஒருவனுடைய வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியான தொன்றன்றோ?

***தொகுப்பு: சகோ. ஆ. திருமுருகன்***
***atmurugan@gmail.com***